www.padippakam.com

# புதிய ஜனநாயகம்



"ஆட்டோ" சங்கர்
சர்வகட்சி
கிரிமினல்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
1-15 செப்டம்பர் '90 5/20 விலை ரூ. 2.

# மண்டல் கமிஷன் ஆதரவும் எதிர்ப்பும் பதவிவேட்டைக்கான மேல்சாதி சண்டை



படிப்பகம்

www.padippakam.com

# ராணிப்பேட்டையில் ஒரு கொள்ளைக் காடு!



குருதியை கொட்டி உழைத்துவிட்டு ஆலையிலிருந்து வீடு திரும்பும் தொழிலாளர்களை ஆலை வாயிலில் சோதனை செய்து 'திருடன்' என முத்திரை குத்துகின்றன அரசு நிறுவனங்கள். ஆனால், அதே சமயம் நிர்வாகத்திலமர்ந்து நாற்காலி தேய்க்கும் அதிகாரிகள் லட்சக் கணக்கிலும் கோடிக்கணக்கிலும் அரசு சொத்தை சூறையாடுவதை வேடிக்கைப் பார்க்கிறது; கையும் களவுமாக பிடிப்பட்டாலும் அவர்களை தண்டிக்காமல் விட்டு பாதுகாக்கிறது நிர்வாகம்.

மத்திய அரசுத் துறை நிறுவனமான வட ஆற்காடு அம்பத்கேர் மாவட்டத்திலுள்ள ராணிப்பேட்டை 'பெல்' நிறுவனம் இதற்கு ஓர் உதாரணம். 1982ல் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் கட்டுமான பணிக் காலத்திலிருந்தே எவ்வித அடிப்படை வசதியுமின்றி அற்ப கூலிக்கு தொழிலாளர்களை கசக்கி பிழிந்து வருகிறது. பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்து நிர்வாகத்தில் அமர்ந்திருக்கும் அதிகார கும்பலோ தொடக்கத்திலிருந்தே லஞ்சம், ஊழல், அதிகார முறைகேடுகள் மூலம் கொழுத்து வருகிறது. இந்நிறுவனத்தின் துணைத் தொழில் வளர்ச்சிப் பிரிவில் (Ancillary Development Section) நடந்து வந்த ஊழல் - கூட்டுக் கொள்ளை தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளது.

'பெல்' நிறுவனம் தனது உற்பத்திக்கு தேவையான துணை பாகங்களை தயாரிக்க பல சிறு தனியார் கம்பெனிகளுக்கு ஆர்டர் கொடுத்து அதற்கான மூலப்பொருளையும் சப்ளை செய்கிறது. கொடுக்கப்படும் ஆர்டரின் மதிப்பில் 10% தொகையை பிடித்தம் செய்து கொள்கிறது நிர்வாகம். வேலைக்கு கொடுப்பட்ட மூலப் பொருளில் வேலை முடிந்து மீதியிருப்பதை அக் கம்பெனிகள் நிறுவனத்திடம் ஒப்படைத்த பின்னரே மீதித் தொகையை திருப்பித் தருகிறது. ஆனால் பல கம்பெனிகள் இத்தொகையை திரும்பப் பெறாமல் இருக்கின்றன. உதாரணத்திற்கு சென்னையிலுள்ள 'ஆட்டோ பார்ட்ஸ் எஞ்சினியரிங்' என்ற கம்பெனி ஒன்றரை கோடி ரூபாய்க்கு வேலை பெற்று முடிக்கப்பட்டும் பிடித்தம் செய்து கொண்ட 15 லட்சத்தை இதுநாள்வரை திரும்பப் பெறவில்லை.

ஏனெனில், மூலப்பொருட்களை [Raw Material - Steel Plates] திருப்பி செலுத்தாமலும், அப்படியே செலுத்தினாலும் ஒன்றுக்கும் உதவாத குப்பை பொருட்களை கணக்கு காட்டி கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கின்றன. ஒரு டன்னுக்கு ரூ.13,500 மதிப்புள்ள மூலப்பொருட்களை [Off-Cut Materials] திரும்ப செலுத்துவதற்கு பதிலாக ரூ.1,400 மதிப்புள்ள குப்பை கூளங்களை [scrap Material] செலுத்தி அதிகாரிகளின் உதவியோடு பொய்க் கணக்கு தயாரித்து சுருட்டுகிறார்கள் தனியார் முதலாளிகள். இதனால் 10% தொகையை ஒரு பொருட்டாக மதிக்காமல் அதிகாரிகளுக்கு விட்டுக் கொடுத்து விடுகிறார்கள். பின்னர் இத்தொகை திரும்ப செலுத்தப்பட்டதாக ஜோடித்து நிர்வாகத்தினர் பங்கிட்டு கொள்கிறார்கள்.

தனியார் முதலாளிகள் ஒரு சிலரைத் தவிர அனைவருமே முன்னாளில் 'பெல்' நிர்வாகத்தில் அதிகாரிகளாக பணிபுரிந்தவர்களே. ராஜினாமா அல்லது வாலன்டரி ரிடெய்மென்ட் மூலம் வெளியேறி நிர்வாகத்தில் கொள்ளையடித்த தொகையை மூலதனமாகப் போட்டு கம்பெனி தொடங்கியவர்கள், நிர்வாகத்திலுள்ள பழைய தொடர்புகள் மூலம் எளிதாக 'காரியத்தை' செய்து முடித்து கொழுத்து வருகிறார்கள்.

இவற்றை ஒரு சில தொழிற்சங்கங்கள் அம்பலப்படுத்தியதால் 'பைல்கள்' அனைத்தும் மறுபரிசீலனை செய்வதற்காக 13 தனியார் கம்பெனிகளுக்கு ஆர்டர் கொடுப்பது நிறுத்தப்பட்டுள்ளன. 'பெல்' புலனாய்வு துறையினர் இது தொடர்பாக விசாரணை செய்து வருகின்ற வேளையிலும் அதிகாரிகள், 'ஆட்டோ பார்ட்ஸ் எஞ்சினியரிங் கம்பெனி' (சென்னை) முதலாளியை பரிசோதனை [Verification] என்ற பெயரில் நிறுவனத்திற்கு உள்ளேயே அழைத்து வந்து முடக்கப்பட்ட 'பைல்'களை திருட்டுத்தனமாக திருத்தங்கள் செய்து கொண்டிருந்த பொழுது தொழிலாளர்கள் கையும் களவுமாக பிடித்து அம்பலப்படுத்தினார்கள்.

அனைத்து மட்டத்திலும் உள்ள அதிகாரிகள் இந்த ஊழலில் சம்பந்தப்பட்டிருப்பதால், உயர்மட்ட நிர்வாகிகள் [Directors] மற்றும் அரசியல்வாதிகள் சிலரும் இதில் தலையிட்டு பிரச்சினையை மூடி மறைத்து முடக்க முயற்சிக்கிறார்கள். ஏற்கனவே அம்பலமாகிய பல ஊழல்கள் அதிகார வர்க்கத்தின் இழுத்தடிப்புகளின் பின்னேயும், அரசியல் தலையீட்டின் பின்னேயும் மூடி மறைக்கப்பட்டன.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள உயர்தர சிமெண்ட் மூட்டைகள் கடத்தப்பட்டு விற்கப்பட்டுள்ளன. 1984-ல் நடந்த சி.பி.ஐ. விசாரணையின் போது இதில் சம்பந்தப்பட்ட பொதுமேலாளர் இ.என். சந்திரசேகரன் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். பின்னர் அப்போது உதவி ஜனாதிபதியாக இருந்த வெங்கட்ராமனின் தலையீட்டில் இது மூடி மறைக்கப்பட்டது.

1982-விருந்து 84-க்குள் இரண்டரை லட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டிங் கார்பைடு டிப்ஸ் [Cutting Carbide Tips] என்ற பொருள் தனியார் நிறுவனங்களிடமிருந்து வாங்கி வரப்பட்டதில் நிறுவனத்திற்கு வராமலேயே சுருட்டப்பட்டது. போக்குவரத்து பிரிவிலிருந்த லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பஸ் டயர்கள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன. 'ஸ்டோர்ஸ்' பிரிவில் இருப்பு பரிசோதனையின் போது 'பேரிங்களுக்கு'ப் பதிலாக அதன் கவர்கள் மட்டுமே இருந்தன. கடந்த ஜூலை மாதத்தில் 'ரிசர்ச் அண்டு டெவலப்மெண்ட்' பிரிவிலிருந்த ரூ.65,000 மதிப்புள்ள புகைப்படக்கருவி கடத்தப்பட்டுள்ளது — இவற்றில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் தண்டனை பெறவில்லை. இது குறித்து விசாரணை நடந்து வருகிறது என காரணம் கூறி நடவடிக்கை எடுக்காமல் ஏய்த்து வருகிறது நிர்வாகம்.

நிர்வாகத்தின் இழுத்தடிப்புகள், சாக்குப் போக்குகள், சதிகளுக்கு எதிராக தொழிலாளர்கள் விழிப்புடன் இருந்து முறியடிப்பதோடு ஊழல்களை வீதிக்கு கொண்டு வந்து அம்பலப்படுத்த வேண்டும்.

தகவல்: வேந்தன்.

## மலிவு விலை சாராயத்தை எதிர்த்து பிரச்சார இயக்கம்

தமிழகமெங்கும் அரசின் மலிவு விலை சாராயக் கடைகள் திறக்கப்பட்டு 'கோலாகலமாக' விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. பெண்களின் 'தாலி' அறுக்கும் இத்திட்டத்தையும், குடி கெடுக்கும் கருணாநிதியையும், இது தொடர்பாக ஒட்டுப் பொறுக்கிக் கட்சிகளின் செயல்பாடுகளையும் அம்பலப்படுத்தி திருச்சி மக்கள் கலை இலக்கிய கழகம் 16.8.90 அன்று பொதுக் கூட்டம் நடத்தியது. திருச்சி புத்தூர் அஞ்சலகம் அருகில் நடத்தப்பட்ட இந்தப் பொதுக் கூட்டத்திற்கு தோழர் கபிலன் தலைமை தாங்க கிளைச் செயலர் முத்துவும் பிற தோழர்களும் உரை நிகழ்த்தினர். மலிவு விலை சாராயத் திட்டத்தால் கள்ளச் சாராயம் ஒழியாது; முன்பைவிட போலீசு உடந்தையுடன் தீவிரமடையவே செய்யும் என சுட்டிக் காட்டி விளக்கி பேசினர். கூட்டத்திற்கு 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். குடிகாரர்களைத் திருத்துவதற்கு பெண்களும், சிறுவர்களும் செய்ய வேண்டியது பற்றியும் தோழர்கள் பேசிய பொழுது பெண்கள் பலர் கைதட்டி வரவேற்றனர். பின்னர் நடந்த எழுச்சிகரமான கலை நிகழ்ச்சி சிறந்த வரவேற்பை பெற்றது.

*தகவல்: ம.க.இ.க. திருச்சி.*



படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

**5 - 20**

1-15 செப்டம்பர்'90

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

### பஞ்சாப்: பிரதமரின் பாதயாத்திரை

# காந்திய நாடகங்கள் - மோசடிகள் பலிக்காது

பஞ்சாபில் அரசுத் தலைவர் ஆட்சிக்கான காலக் கெடு முடிவதையொட்டி பஞ்சாப் பிரச்சினை மீதான அரசியல் நடவடிக்கைகள், அரசியல்வாதப் பிரதிவாதங்கள் மீண்டும் சூடு பிடித்துள்ளன. ஆட்சிக்கு வந்தால் 15 நாட்களில் பஞ்சாப் பிரச்சனையைத் தீர்த்து விடுவோம் என்ற சண்டப்பிரசண்டம் செய்தது ஜனதாதள - தேசிய முன்னணி.

அதன்பிறகு, சீக்கிய மதவெறி தீவிரவாதிகளுடன், குறிப்பாக அதன் அரசியல் தலைவர் சிம்ராஞ்சித் சிங் மானுடன் பேரங்கள் நடத்தி ஓர் ஒப்பந்தத்துக்கு வர பலமுறை ஜனதாதள - தேசிய முன்னணி அரசு முயன்றது. பிரதமர் வி.பி.சிங் அமிர்தரசு பொற்கோவிலுக்குத் திடீர் பயணம் போய், பாதுகாப்பு ஏற்பாடின்றி நகர்வலம் வந்தது; சர்வ கட்சிப் பேரணிகள் நடத்தியது; பொற்கோவில் மீது 1984 இராணுவத் தாக்குதல் - நீல நட்சத்திர நடவடிக்கையைத் தொடர்ந்து இராணுவத்தில் கலகம் செய்து வெளியேறிய சீக்கிய சிப்பாய்களுக்கு மறு வாழ்வளிப்பது; சீக்கியப் பிரமுகர்களுக்கு கவர்னர் போன்ற உயர்பதவிகள் தருவது; பஞ்சாபுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பது; சீக்கியத் தீவிரவாதிகள், தடுப்புக் காவல் கைதிகளை விடுதலை செய்வது; வழக்குகளை விலக்கிக் கொள்வது; 1984 நவம்பர் சீக்கியர் படுகொலைகளுக்குக் காரணமானவர்களைத் தண்டிப்பதற்கான வாக்குறுதி - விசாரணை; அந்த அகதிகளுக்கு நிவாரணங்கள் வழங்குவது - இப்படிப்பட்ட சலுகைகள் மூலம் சீக்கியத் தீவிரவாதிகளுடன் பேரங்கள் நடத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது.

ஆனால் இவற்றுக்கெல்லாம் சீக்கியத் தீவிரவாதிகள் மசிந்துவிடவில்லை. அவர்களில் எந்த ஒரு பிரிவும் அரசுடன் ஒப்பந்தத்துக்குப் போய்விடக் கூடாது என்பதில் மற்ற பிரிவினர் குறியாய் இருந்தனர். அதற்கான முயற்சிகள் எதையும் சகித்துக் கொள்ள மாட்டோம் என எச்சரிக்கும் - கண்டிக்கும் வகையிலே அகாலி, தீவிரவாதக் குழுத் தலைவர்களே கூட கொல்லப் பட்டனர். ''பஞ்சாபில் நேற்றிரவு நடந்த தனித்தனிச் சம்பவங்களில்....'' என்று தொடங்கி அரசு பயங்கரவாத, சீக்கிய மதவெறி பயங்கரவாத செயல்கள் பற்றிய வானொலி - வானொலிச் செய்திகள் 'காலை வழிபாடு' போல அன்றாட வழக்கமாகவே தொடர்ந்தது. ஒருபுறம் சீக்கிய தீவிரவாதிகள் அரசுடனான பேரத்தில் தமது நிபந்தனைகள் - கோரிக்கைகளை வரைமுறையின்றி அதிகரித்துக் கொண்டே போனார்கள்; மறுபுறம் பாசிச ராஜீவ் கும்பலைப் போலவே பாரதீய ஜனதாவும், போலி கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தீவிரவாதிகளுடனான எவ்வித சமரசம், சலுகை, பேரங்களையும் கடுமையாக எதிர்த்தன. இந்த நிலைமைகளில் பஞ்சாப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதென்ற ஜனதாதள - தேசிய முன்னணி அரசின் முயற்சிகள், பேரங்கள், நாடகங்கள் எல்லாம் பொய்த்துப் போயின. அது தன் தோல்வியை ஒப்புக் கொள்ளும் வகையில், பஞ்சாபில் அரசுத் தலைவர் ஆட்சியை நீட்டிப்பதற்கான சட்டத்திருத்தம் கொண்டு வந்தது.

ஆறுமாதத்துக்குள் பஞ்சாப் பிரச்சனையைத் தீர்த்து, தேர்தல்கள் நடத்தி ஜனநாயகத்தை நிலைநாட்டிவிடுவதாக மீண்டும் வாக்குறுதி அளித்தது. ஆனால் பஞ்சாப் பிரச்சனை தீரவில்லை. மேலும் தீவிரமாகியது. இப்போது மீண்டும் அரசுத் தலைவர் ஆட்சியை மேலும் ஆறுமாதங்கள் நீட்டிக்க வேண்டிய அவசியம் வந்துவிட்டது. திடீரென்று தேசிய முன்னணி அரசுக்கு பஞ்சாப் பிரச்சனையில் அக்கறை வந்துவிட்டது! கடந்த மாதம் பஞ்சாப் - எல்லைப்புற கிராமங்கள் சிலவற்றுக்கு பிரதமர் வி.பி.சிங் பயணம் போனார். மீண்டும் பஞ்சாப் வந்து ஒருவார காலம் கிராமப்புறங்களில் பாதயாத்திரை போய் மக்களின் நல்லாதரவைப் பெறப் போவதாக அறிவித்தார்.

இந்தப் 'பாச்சா'வெல்லாம் பலிக்காது; சீக்கிய பயங்கரவாதிகளை ஒடுக்காமல் மேலும் சலுகைகள் தருவதோ, தேர்தல்கள் நடத்துவதோ கூடாது என்று ஜனதாதள - தேசிய முன்னணியின் கூட்டாளிகளான பாரதீய ஜனதா மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகளும், எதிர்க் கட்சியான காங்கிரசும் பிடிவாதமாய் இருக்கின்றன. சீக்கிய மதவெறித் தீவிரவாதிகளோ, சுயாட்சி கோரும் அனந்தப்பூர் சாகிப் தீர்மானத்தை ஏற்பது, மற்றும் பிற சலுகைகளை அடியோடு நிராகரித்துவிட்டனர். பஞ்சாப் இந்தியாவின் காலனியாக உள்ளது; எனவே இந்திய இராணுவத்தை விலக்கிக் கொண்டு 'சீக்கிய தேசிய'த்துக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும்; நீல நட்சத்திர நடவடிக்கைக்காக நாடாளுமன்றத் தீர்மானத்தின் மூலம் இந்திய நாடே மன்னிப்புக் கோர வேண்டும்; இந்திய இராணுவ முன்னாள் தளபதி வைத்யாவைக் கொன்ற கொலையாளிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்; அமெரிக்கா தலையிட்டு காலிஸ்தான் நிறுவ உதவ வேண்டும்; ஐக்கிய நாடுகள் சபையில் முறையீடு செய்வோம் - என்று கூறி வருகின்றனர்.

இந்தக் கோரிக்கைகள் எதையும் இந்திய ஓட்டுக் கட்சிகள், அரசுகள் எதுவும் ஏற்றுக் கொள்ள மாட்டா என்பது உறுதியானது. ஒன்று அரசு பயங்கரவாதத்தை மேலும் கொடூரமாக்கி தீவிரவாதிகளை அடக்கி ஒடுக்குவது; அல்லது அதோடு அகாலி, தீவிரவாதக் குழுக்கள் - தலைவர்களைப் பிளவுபடுத்தி, மோத விடுவது; சலுகைகளைக் காட்டி சீக்கிய மக்களது ஆதரவைப் பெற முயலுவது - ஆகிய இரண்டு வழிகள் தாம் இவர்களிடம் உள்ளன. ஆனால் இவை எதுவுமே பஞ்சாப் பிரச்சினையைத் தீர்க்காது என்பதைத்தான் கடந்த எட்டாண்டு கால அனுபவங்கள் காட்டிவிட்டன. அப்படி இருக்கும்போது பாத யாத்திரைகள், கோரிக்கைகள் வெறும் கேலிக்கூத்தாகவே முடியும். எனவே பஞ்சாபில் உழைக்கும் மக்கள் அரசு பயங்கரவாதம் - சீக்கிய மதவெறி பயங்கரவாதம் இரண்டுக்கும் எதிராக ஆயுதமேந்தி, தியாகி பகத்சிங் புரட்சிப் பாதையிலே இறங்குவதுதான் பஞ்சாப் பிரச்சனையைத் தீர்க்கும். அவர்கள் தமது உடனடிப் பணியாக, பாத யாத்திரைகள் போன்ற காந்திய நாடக மோசடிகளை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com

# "ஆட்டோ" சங்கர் சர்வகட்சி கிரிமினல்

உயர்மட்ட போலீசு அதிகாரிகள், 'அரசியல்வாதிகளின் விபச்சாரத் தரகனும் கொலைகாரனுமான 'ஆட்டோ' சங்கர் சென்னை மத்திய சிறையிலிருந்து காணாமல் போனான்! அவனோடு திருவான்மியூர் 6க்கும் மேற்பட்ட தொடர் கொலைகள் வழக்கில் கைது செய்யப்பட்ட 2 பேரும் பிற கொலை, கொள்ளை வழக்கில் கைது செய்யப்பட்ட 2 பேரும் ஒன்றாக தப்பி விட்டதாக போலீசு கூறுகிறது. போலீசின் இந்த அண்டப்புளுகை ஒருவரும் நம்பவில்லை. சிறை கதவுகள் அனைத்தையும் திறந்து 'ஆட்டோ' சங்கரை வழியனுப்பி வைத்தது போலீசு தான் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. 'ஆட்டோ' சங்கரை போலீசு உயிருடன் அனுப்பியதா அல்லது பிணமாக்கி மறைத்துவிட்டதா? என்பதுதான் இப்போது எழுந்துள்ள சந்தேகம்!

'ஆட்டோ' சங்கர் 20 அடி உயர இரும்பு வேலி, 25 அடி உயர சுவர் ஏறி குதித்து தப்பிவிட்டான். அதற்கு வசதியாக கயிறு எல்லாம் கொடுத்து சிலர் வெளியிலிருந்து உதவியிருக்கிறார்கள். விடியற்காலை சிறைக்கு தண்ணீர் கொண்டு வரும் லாரியில் தப்பி விட்டான்' என்று தனது எடுபிடி பத்திரிக்கைகள் மூலம் கதை சொல்லியது. போலீசு. அதையும் மீறி போலீசு அதிகாரிகளுக்குள் இருக்கும் மோதலில் ஒரு சில உண்மைகள் வெளியே வந்துவிட்டன. பகல் போல் வெளிச்சம் தரும் விளக்குகளை அதிகாரிகளே அன்றிரவு அணைத்திருப்பது. அவனுடைய அறைக் கதவை பூட்டாமல் விட்டது, திசைத் திருப்புவதற்காக அதிகாரிகளே மதிற்சுவர்களில் கயிற்றை தொங்க விட்டது, 'ஆட்டோ' சங்கரை வைத்தே அவனுடைய ரேகைகளை மதிற் சுவர்களில் பதிய வைத்து இருப்பது ஆகியவைகள் அனைத்தும் வெளியில் வந்துவிட்டன.

வழக்கம் போல் கண்துடைப்புக்காக, சிறை கண்காணிப்பாளர் உட்பட ஒன்றிரண்டு உயர் போலீசு அதிகாரிகளையும், 10க்கும் மேற்பட்ட மூன்றாம், நான்காம் மட்ட சிறைக் காவலர்களையும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்திருக்கிறது கருணாநிதி அரசு. 'ஆட்டோ' சங்கர் வைக்கப்பட்டிருந்த பகுதிக்கு பொறுப்பான அதிகாரிகளில் 3 பேரை விசாரணைக்கு கைது செய்திருக்கிறது.

'ஆட்டோ' சங்கரை தப்புவிப்பதில் போலீசு அதிகாரிகள் எப்படி எல்லாம் நீண்ட காலமாக செயல்பட்டு இருக்கிறார்கள் என்ற விபரங்கள் மேலும் வந்துக் கொண்டிருக்கின்றன. சிறை விதிகளுக்கு மாறாக ராஜா என்ற இன்னொரு பிரபல கிரிமினல் கும்பலின் தலைவனையும் 'ஆட்டோ' சங்கர் விருப்பத்தின்படி அவனது அறையில் அதிகாரிகள் வைத்துள்ளனர். 'இருவரும் சிறை அதிகாரிகளை நன்றாக கவனித்துக் கொண்டனர்' என்று விசாரணையின் போது போலீசு அதிகாரியே வாக்கு மூலம் தருகிறார்.

கடந்த 2 ஆண்டுகளில் மற்றவரைப் போல் அவன் கைதி உடையில் ஒரு நாளும் இருந்தது இல்லை. தினமும் ஒரு நாகரீக உடையில் பொழுதை கழித்தான். அவனை தேடிவரும் ஆட்களுடனும் அழகிகளுடனும் சிறப்பு சலுகைப் பெற்று பல மணி நேரம் பேசிக் கொண்டிருப்பான். அவர்கள் கொண்டு வரும் உணவு, பழங்கள் தவிர வேறு எதையும் தொட மாட்டான் என்றும் விசாரணையில் வந்து கொண்டிருக்கிறது.

> "
> **ஆட்டோ' சங்கர் போன்ற கிரிமனல் களுக்கு சிறையில் போலீசு அதிகாரிகள் விருந்து! போராடிய டி.வி.எஸ். தொழிலாளர்களுக்கு மருத்துவமனைக் காவலிலும் கை விலங்கு!**
> "

இன்னும் பல இரவுகளில் அவன் வெளியே தங்கிவிட்டு காலையில் சிறைக்கு வருவான் என்றும் சில செய்திகள் கூறுகின்றன. எங்களைப் போன்ற சிறை அதிகாரிகளை 'ஆட்டோ' சங்கர் "போய்யா" "வாய்யா" என மிரட்டுவான் என்று அழாத குறையாக கூறுகிறார், ரகீம் என்ற விசாரணை சிறை அதிகாரி.

நீண்டநாட்களாகவே 'ஆட்டோ' சங்கர், தன்னுடைய விடுதலைக்கு உதவாத தனது பழைய வாடிக்கையாளர்களை விசாரணையின் போது காட்டி கொடுத்துவிடப் போவதாக பகிரங்கமாக கூறி வந்திருக்கிறான். தன்னுடன் போதையிலும், பெண் சுகத்திலும் மிதந்துக் கொண்டிருந்த அரசியல் கட்சி தலைவர்கள், உயர் போலீசு அதிகாரிகள் லீலைகளை அவன் வீடியோவாக வைத்துள்ளான். 'ஆட்டோ' சங்கருக்கும் உயர் போலீசு அதிகாரிகளுக்கும் ஆரம்பத்தில் தரகுவேலை பார்த்த ஜூனியர் விகடன் ஏடு இதை பலதடவை உறுதி செய்தது. தனக்கு அவ்வாறான படங்களை எதிர்தரப்பு போலீசு அதிகாரிகள் போட்டு காட்டியதாகவும் கூறியது.

இதில் முக்கிய புள்ளிகளான முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்களும், இந்நாள் போட்டி அ.தி.மு.க. தலைவர்களுமான சாத்தூர் ராமச்சந்திரன், திருநாவுக்கரசு, ஜேப்பியார் போன்றவர்கள் ஒரு சிலர். கருணாநிதியின் மகனும், 'வருங்கால முதல்வ'ருமான மு.க.ஸ்டாலினின் ரகசிய உலக கழக தம்பிகளில் முக்கியமானவன் 'ஆட்டோ' சங்கர். தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் ஸ்டாலின் பரிவாரங்கள் 'ஆட்டோ' சங்கரை தண்டனையிலிருந்து விடுவிக்க முயற்சித்தனர். 'ஆட்டோ' சங்கரும் தி.மு.க. கரை வேட்டிக் கட்டிக் கொண்டு விசாரணையின் போது அலட்சியமாக நடந்து கொண்டான். 'ஆட்டோ' சங்கரை சட்டத்திலிருந்து தப்புவிக்க முயற்சித்தால் மக்களிடம் பெரிய அளவில் பெயர் கெட்டுவிடும் என்று ஸ்டாலின் எதிர் அணி கும்பல் கருணாநிதியிடம் புகார் செய்ய வேறு புதிய திட்டம் உருவானது.

சென்னை போலீசு கமிஷனர் துரை, டி.ஜி.பி. தேவாரம் இவர்களுக்கு இடையே நடந்த அதிகார மோதலில் வெளியே வந்ததுதான் 'ஆட்டோ' சங்கர் விவகாரம். எனவே அவர்களுக்கிடையே சமரசம் செய்யப்பட்டு தேவாரம் ஆதரவு போலீசு அதிகாரிகள் மீண்டும் புதிய பதவிகளில் அமர்த்தப்பட்டனர். 'ஆட்டோ' சங்கரின் கிரிமினல் தொழிலுக்கு உடந்தையான, வேலை நீக்கம் செய்யப்பட்ட துணை சூப்பரிண்டண்ட் தங்கையா, போலீசுக்கு நல்லொழுக்கம் போதிக்கும் துறையில் அமர்த்தப்பட்டார். இன்ஸ்பெக்டர்கள் பவுன், பெருமாள் போன்றவர்கள் மீண்டும் அதே பதவியில் அமர்த்தப்பட்டனர். தாங்கள் தப்பிக்க 'ஆட்டோ' சங்கர் வழக்கின் விசாரணையை முடிந்தவரை நீட்டித்தனர்.

தன்னை அனைவரும் கைவிட்ட நிலையில்தான் அவர்களை காட்டி கொடுத்துவிட போவதாக மிரட்டலில் ஈடுபட்டான் 'ஆட்டோ' சங்கர். எனவே அவனை தீர்த்து கட்டுவதற்கு சரியான நேரத்திற்கு காத்திருந்தனர் உயர் போலீசு அதிகாரிகள், அரசியல் தலை



படிப்பகம்

www.padippakam.com

வர்கள்! இப்போது அவனை உயிரோடு வழியனுப்பி வைத்திருந்தாலும், வெளியில் அவனை போலீசால் லகுவாக கொல்லமுடியும்! தேடும்போது மோதலில் இறந்துவிட்டதாக பிணமாக்கி விடுவார்கள். அவன் பிணத்தோடு அவனோடு தங்களுக்கு இருந்த உறவையும் மறைத்து விடுவார்கள்.

போலீசு அதிகாரிகள் 'ஆட்டோ' சங்கருக்கு எப்படியெல்லாம் சேவகம் செய்தார்கள் என்பதை பத்திரிக்கை பக்கம் பக்கமாக எழுதியபோது, அதே நாளில் - ஆகஸ்ட் 22 - சென்னை உயர்நீதி மன்றம் இருவேறு வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கியது. அதில் புகார் கொடுத்த ஒரு அபலை விதவையையும், போராடிய தொழிலாளர்களையும் போலீசு அலட்சியமாக அவமானப்படுத்தியதையும் காரணமே இல்லாமல் சிறையிலடைத்து வைத்ததையும் அம்பலப்படுத்தியது.

தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை தாலுக்கா, மாரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் புலவர் குணசேகரன். அ.தி.மு.கவின் தீவிர ஊழியர். இவர் ஊத்தங்கரை கூட்டுறவு நூற்பாலை தொழிற்சங்கத்தில் சிறப்பு தலைவராக இருந்தார். '84 ஆம் ஆண்டில் இவர் அடையாளம் தெரியாத நபர்களால் படுகொலை செய்யப்பட்டார். நூற்பாலையின் நிர்வாக இயக்குநர் பெரியசாமியுடன் இருந்த பகையின் காரணமாகவே தன் கணவர் கொல்லப்பட்டார் என்று அவரது அபலை மனைவி போலீசில் புகார் செய்தார். பிறகு சென்னை உயர்நீதி மன்றத்திலும் போலீசின் அலட்சியத்தை புகார் செய்தார். இரண்டு மூன்று கண்துடைப்பு விசாரணைகளுக்கு பிறகு 5 ஆண்டுகள் அவ்வழக்கை அலட்சியப்படுத்தினர். தீர்ப்பு என்ற பெயரில் உயர்நீதி மன்றம் இப்போது உதவாக்கரை உத்திரவு வழங்கியுள்ளது.

5 ஆண்டுகாலம் இழுத்தடித்த அதே தர்மபுரி மாவட்ட உயர் போலீசிடம் இவ்வழக்கை விசாரிக்குமாறு ஆணைப் பிறப்பித்துள்ளது. தீர்ப்பு(!) வழங்க இவ்வாறு நீண்ட (5 வருடம்) காலமானதற்கான காரணத்தையும் கூறுகிறது, நீதி மன்றம். ''நீதிமன்றங்களில் ஏராளமான வழக்குகள் பல ஆண்டுகள் முடிக்கப்படாமல் உள்ளதாக பலரும் வருத்தப்படுகின்றனர். கிரிமினல் கோர்ட்டுகளை பொறுத்தவரை போலீசாரின் மெத்தனப் போக்கினால் தான் வழக்கு விசாரணைகள் தாமதமாகின்றன... இந்த வழக்கு புகார் குறித்து சேலம் மற்றும் தர்மபுரி மாவட்ட போலீசாருக்கு பலமுறை தகவல் அனுப்பியும் அவர்கள் எவ்வித பதிலும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. போலீசு அதிகாரிகளின் இந்த பொறுப்பற்ற செயல்களால், பொதுமக்களின் உரிமைக்கும் சுதந்திரத்துக்கும் ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது'' என்று முதலைக் கண்ணீர் வடித்தது. மீண்டும் அயோக்கியத் தனமாக அதே போலீசிடம் பொறுப்பை ஒப்படைத்துள்ளது.

இன்னொரு வழக்கு டி.வி.எஸ். தொழிலாளர்களை சட்டவிரோதமாக சிறையில் அடைத்து வைத்திருந்தது பற்றியது. டி.வி.எஸ்.-ன் கொத்தடிமைத்தனத்திற்கு எதிராக பலவித போராட்டங்களை நடத்திய தொழிலாளர்கள் சமீபத்தில் உண்ணாவிரத போராட்டம் நடத்தினர். இழுத்துச் சென்று போலீசு அவர்களை அடித்து அவமானப்படுத்தியது. காரணமேயில்லாமல் கைது செய்து 203 தொழிலாளர்களை சிறையில் அடைத்தது. புகார், விசாரணை, வழக்கு எதுவுமில்லாமல் தன்னிச்சையாக 15 நாட்களுக்கு ஒருமுறை காவலை நீட்டித்துக் கொண்டே 3 மாத காலம் சிறையில் அடைத்தது. கடைசியில் அத்தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் உயர்நீதி மன்றத்தில் 'ஹேபியஸ் கார்பஸ்' (கைது செய்தவர்களை கோர்ட்டுக்கு கொண்டுவர கோருவது) மனு போடப்பட்டது.

அதன் பிறகு நீதிமன்றம், தொழிலாளர்கள் அனைவரையும் 500 ரூபாய் சொந்த ஜமீனில் விடுதலை செய்யுமாறு உத்திரவிட்டது. தொழிலாளர்களின் சட்டப்பூர்வமான போராட்டத்தை கொச்சைப்படுத்தி கிரிமினல்கள் போல் அவர்களை சிறையில் அடைத்து வைத்திருந்த போலீசை, ஒரு வார்த்தைக்கூட கண்டிக்கவில்லை, நீதிமன்றம்.

ஏற்கனவே, சுமன் போன்ற நீலப்பட விபச்சார கிரிமினல்கள், ராபின் மெய்ன் போன்ற வங்கி மோசடி கிரிமினல்களின் குற்ற விசாரணை வழக்குகள் பரபரப்பாக பேசப்பட்டது. அவர்களை பிடித்த போலீசின் சூரப்புலித்தனம் திகில் கதைபோல் விவரிக்கப்பட்டது. பிறகு அக்கிரிமினல்கள் சட்டப்பூர்வமாக வெளியில் வந்து பழையபடி 'தொழிலை' கவனிக்க போய் விட்டனர். கருணாநிதியின் மகன் மு.க.முத்து சம்பந்தப்பட்ட நடிகை விஜயஸ்ரீ கொலை வழக்கு, கிரிமினல்கள் போலீசு கூட்டுடன் நடந்த சென்னை அரசு அதிகாரி மனைவி பிரேமா கொலை வழக்கு - இப்படி எதிலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.



ஆட்டோ சங்கர் சிறையில் ராஜ மரியாதை
எல்லா கதவுகளையும் திறந்து விமரிசையான
வழியனுப்பு விழா!

போலீசு, கிரிமினல்கள் கூட்டாக, தங்கள் கள்ளக் காதலிகள், தொழில் கூட்டாளிகள் இவர்களை மட்டும் படுகொலை செய்வது இல்லை. தங்களுடைய சமூக விரோத நடவடிக்கைகளுக்கு வசதியாக ஒரு பேட்டை முழுவதையுமே பீதி ஏற்படுத்தி தங்கள் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருகின்றனர். இதற்காக தேவையான இடங்களில் ரௌடிகள் சாதாரண நபர்களையும் பெண்களையும் சீண்டி வம்புக்கிழுத்து ரௌடித்தனத்தில் இறங்கி அப்பகுதியையே பீதியில் ஆழ்த்துகின்றனர். ரௌடித்தனத்திற்கு எதிராக சிறு முணுமுணுப்பு எழுந்தால் கூட கொலையே செய்கின்றனர். அதன் மூலம் அதிகாரப்பூர்வ ஊரடங்கு உத்திரவை அறிவிக்காமலேயே சம்மந்தப்பட்ட இடங்களில் அமுல்படுத்தி தங்கள் தொழிலை எதிர்ப்பின்றி நடத்துகின்றனர்.

தமிழகம் முழுவதும் இவ்வாறான போலீசு - கிரிமினல் அட்டகாசம் முடிவேயில்லாமல் தொடர்கிறது. சமீபத்தில் சென்னையில் இது பகிரங்கமானது. சென்னை ஐஸ் அவுஸ் மற்றும் தாம்பரத்தில் 20க்கும் மேற்பட்ட கிரிமினல்கள் கொலை ஆயுதங்களால் காரணமே இல்லாமல் மக்களை வெட்டி சாய்த்தனர். அப்போது போலீசு கும்பல் மக்களை போலவே பாதுகாப்பான இடங்களுக்கு ஓடி மறைந்து கொண்டது. ரௌடிகள் போனபிறகு, ஜீப்புகளில் 'சர் புர்' என்று வந்து வீதியில் நடந்து கொண்டிருந்த மக்களையெல்லாம் அடித்து இழுத்துச் சென்றது. பிறகு ரௌடிகளை தேடுவதாக துப்பாக்கியுடன் திரிந்து மக்களை மரணபயத்தில் மூழ்கடித்தது.

இந்த பேட்டை கிரிமினல்களும், 'ஆட்டோ' சங்கர் போன்ற மஃபியாக்களும் தான் சகல மட்டங்களிலும் அதிகார மையங்களாக இருக்கிறார்கள். ஓட்டுப் பொறுக்கிகள், உயர் மட்ட அதிகாரிகள், போலீசு, நீதி மன்றம் — எங்கும் செல்வாக்கு செலுத்துகிறார்கள். பல நேரங்களில் இவைகளை வழிநடத்தியும் செல்கிறார்கள். இந்திய அளவில் இதேபோல் பல ராஜேந்திர சேத்திகள், சோப்ராஜ்கள், சந்திரசுவாமிகள் போன்ற கிரிமினல்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் இந்த அரசியல், அதிகார அமைப்பு முறை - பாராளுமன்ற ஜனநாயகம், அரசு எந்திரம் - முழுவதுமே கிரிமினல்களின் காலடியில் தஞ்சம் புகுந்து தான் தனது இறுதிகாலத்தை நீட்டிக் கொண்டிருக்கிறது. இதை நாம் மௌனமாக அனுமதிக்கும் வரை 'ஆட்டோ' சங்கர், ராபின் மெய்ன், சோப்ராஜ் போன்ற கிரிமினல்கள் தான் எதிர்கால இந்தியாவின் தலைவர்கள்!

● குணசேகரன்.

படிப்பகம்

www.padippakam.com

## இடஒதுக்கீடு ஆதரவும் எதிர்ப்பும்:

# பதவிவேட்டைக்கான மேல்சாதி சண்டை!

மண்டல் கமிஷன் அறிக்கையை ஏற்று கல்வியிலும் சமூகத்திலும் பின்தங்கி விட்ட பிற்பட்ட சாதியினருக்கு இடஒதுக்கீடு செய்வதாக தேசிய முன்னணி அரசு அறிவித்ததைத் தொடர்ந்து, இடஒதுக்கீடு எதிர்ப்பு கிளர்ச்சிகள் வட மாநிலங்களில் பற்றி எரியத் தொடங்கிவிட்டது. அரசு கட்டிடங்கள், ரயில் நிலையங்கள், போக்குவரத்து வாகனங்கள் கொளுத்தப்படுகின்றன. டெல்லியில் பந்த், பாட்னாவில் சாலைமறியல், வாகன எரிப்பு, லக்னோவில் ரயில் மறியல், பட்டங்களைக் கொளுத்துவது, பிரதமர் வி.பி.சிங்கின் கொடும்பாவி எரிப்பு என்று மாணவர்கள் கலவரங்களில் இறங்கியுள்ளனர். இடஒதுக்கீடு எதிர்ப்பு கிளர்ச்சி தீவிரமானதும் ஆகஸ்ட் இறுதியிலிருந்து ஒரு மாத காலத்துக்கு டெல்லியில் பள்ளி - கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன. அரசு எதிர்ப்பு போராட்டமாகத் தொடங்கி ஆந்திரா வரை பரவியுள்ள இக்கிளர்ச்சி சாதிக் கலவரமாக வெடித்துப் பரவும் அபாயம் நீடிக்கிறது.

**ஓட்டுக்கட்சிகளின் ஆதரவு! பத்திரிகைகளின் தலைமை!**

அம்பேத்கார் நூற்றாண்டு விழா கொண்டாடும் சமூகநீதி ஆண்டின் பெருஞ் சிறப்பான நடவடிக்கை என்று அனைத்து ஓட்டுக்கட்சிகளும் அரசின் இடஒதுக்கீட்டு முடிவை ஆதரிக்கும் அதேசமயம், காங்கிரசு, ஜனதாதளம், பாரதீய ஜனதா கட்சிகளிலுள்ள பார்ப்பன மேல்சாதி வெறியர்கள் பின்னாலிருந்து கொண்டு இக்கலவரத்தைத் தூண்டிவிடுகின்றனர். பார்ப்பன - மேல்சாதி வெறியர்கள் பின்னாலிருந்து கொண்டு தூண்டிவிடும் இக்கிளர்ச்சிக்கு பார்ப்பன பத்திரிக்கைகள் இன்று தலைமையேற்று நடத்துகின்றன. இந்து, டைம்ஸ் ஆஃப் இந்தியா, எக்ஸ்பிரஸ் நாளேடுகளின் பார்ப்பன கும்பலும் குறிப்பாக எக்ஸ்பிரஸ் நாளேட்டின் ஆசிரியரான அருண்ஷோரியும் இடஒதுக்கீட்டுக்கு எதிராக நெருப்பைக் கக்குகின்றனர். எங்காவது விவசாயிகள், தொழிலாளர்கள் போராட்டங்கள் தீவிரமடைந்தால் வன்முறையானது, தேச விரோதமானது என்று கூச்சல் போடும் இக்காந்தீயக் கும்பல், இன்று மேல்சாதி மாணவர்களைப் பார்த்து இடஒதுக்கீடு எதிர்ப்பு 'போராட்டத் தீயில்' குதிக்குமாறு உசுப்பி விடுகிறது. ''பாரதீய ஜனதா, மார்க்சிஸ்டு கட்சிகளின் மாணவர் அமைப்புகளான ஏ.பி.வி.பி; எஸ்.எப்.ஐ. ஆகியன இப்போராட்டத்தில் இறங்குவதில் இன்னும் ஏன் தயக்கம் காட்ட வேண்டும்'' என்று ஆதங்கப்பட்டு தூண்டுகின்றனர். ''நாட்டைப் பேரழிவில் இருந்து காப்பாற்ற'' மாணவர்களும் மற்றவர்களும் இக்கிளர்ச்சியை ஆதரித்து மேலும் ஆழமாக்கி பரப்புமாறு வெறியூட்டுகின்றனர்.

இடஒதுக்கீட்டினால் சமூகநீதி பிறந்து விடும் என்று நாம் ஏற்பவர்களல்ல. இது அரசு எந்திரத்தில் 'சூத்திரர்'களைப் பங்கேற்ற வைத்து அரசு வன்முறையை நியாயப்படுத்துவதற்கான ஏற்பாடுதான். ஆனால் மண்டல் கமிஷன் பரிந்துரையின் ஒரு பகுதியை மட்டும் இப்போது அமுலாக்க முடிவு செய்த உடனேயே, தமது அதிகாரம் பறிக்கப்படும் ஆத்திரத்தில் பார்ப்பன மேல்சாதி வெறியர்கள் கலவரத்தைத் தூண்டுகின்றனர். மேல்சாதி அறிவுஜீவிகள் நியாயவாதங்களை அடுக்குகின்றனர்.

**மேல்சாதியினர் 'திறமை'சாலிகளா?**

பிற்பட்டவர் என்ற காரணத்துக்காக தகுதியற்ற ஒருவரை அரசு நிர்வாகத்தில் நியமித்தால் நாடு குட்டிச்சுவராகிவிடும் என்ற வாதத்தையே இவர்கள் பிரதானமாக முன்வைக்கின்றனர். அதாவது, ''தகுதியும் திறமையும் இருந்தும்கூட, ஒருவர் முற்பட்டவர் என்பதால புறக்கணித்துவிட்டு, இடஒதுக்கீட்டின்படி திறமையற்ற ஒருவரை அரசு நிர்வாகத்தில் அமர்த்தினால் நிர்வாகம் சீர்குலையும்; ஊழலும் அராஜகமும் தலைவிரித்தாடத் தொடங்கிவிடும். தகுதியும் திறமையுமற்ற ஒருவர் ராணுவத் தளபதியாகிவிட்டால் நாட்டின் பாதுகாப்பு என்னவாகும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இதை உணர்ந்துதான் நேருவே இடஒதுக்கீட்டை எதிர்த்தார். இப்போதைய அரசு தகுதியற்றவர்களை அரசு நிர்வாகத்தில் புகுத்துவதோடு அவர்கள் தொடர்ந்து பதவி உயர்வு பெறவும் வாய்ப்பளித்துள்ளது. எனவே சாதியக் கண்ணோட்டத்தை விட்டுவிட்டு நாட்டின் நலனை எண்ணிப் பார்த்து, இட ஒதுக்கீட்டு முறையை எதிர்த்துப் போராட முன்வரவேண்டும்'' என்று உபதேசிக்கின்றனர்.

பிற்பட்ட சாதியினர் அரசு நிர்வாகத்துக்கு தகுதியற்றவர்களா இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும். தகுதியும் திறமையும் வாய்ந்த முற்பட்டவர்கள் அரசு அதிகாரத்தில் இருந்து கொண்டு இத்தனை நாளும் என்ன சாதித்தார்கள்? நாட்டை எதிர்திசையில் வழிநடத்திச் சென்றதோடு வறுமையும் வேலையின்மையும் தானே கண்ட பலன். திறமையாக லஞ்ச ஊழலைச் செய்ததைத் தவிர, திறமைமிக்க இந்த மேல்சாதி அதிகாரிகள் வேறென்ன சாதித்தார்கள்?

போபால் விஷவாயுப் படுகொலைக்குக் காரணமான ஏகாதிபத்திய அரக்கர்கள் எந்த ஆபத்துமின்றி நாட்டை விட்டுத் தப்பிச்செல்ல உதவிய தேசவிரோதிகள் யார்? 'திறமை மிக்க' முற்பட்ட அதிகாரிகள் தானே!

தகுதி - திறமையற்றவர்களை ராணுவ அதிகாரிகளாக நியமித்தால் நாட்டின் பாதுகாப்பு என்னவாகும் என்று பீதியூட்டும் அறிவாளிகளே, போபர்ஸ் பீரங்கி பேரத்திலும், ஹெச்.டி.டபிள்யூ. என்ற ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல் பேரத்திலும் கோடிகோடியாய் கமிஷன் அடிக்க தரகன் இந்துஜாவுக்கு ராணுவ அதிகாரிகளே உடந்தையாய் இருந்தார்களே, இதுதான் தகுதியா? போபர்ஸ் பீரங்கி, இங்கிலாந்தின் வெஸ்ட்லாந்து ஹெலிகாப்டர், ஹெர்மஸ் போர்க்கப்பல், ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல் முதலான காலாவதியான ஆயுதங்களை கோடிக்கணக்கில் வாங்கி கமிஷன் கொள்ளையடித்து, தேசநலன்களை அடகுவைக்கும் இத்தகைய 'தகுதியும் திறமையும் வாய்ந்த' ராணுவ அதிகாரிகளால் தான் உண்மையில் நாட்டுக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது. லஞ்சஊழல், அதிகார முறைகேடுகளாலும் தேசவிரோத நாசகார திட்டங்களாலும், நாட்டைச் சீர்குலைத்தது 'திறமைமிக்க' மேல்சாதி அதிகாரிகள்தான் என்பதைத்தானே 40 ஆண்டுகால அனுபவம் காட்டுகிறது. இந்த லட்சணத்தில் தகுதியற்றவர்கள் அரசு பதவிகளுக்கு வந்

## பார்ப்பன கொழுப்பு!

பம்பாயிலிருந்து வெளிவரும் ''டைம்ஸ் ஆப் இந்தியா'' நாளேட்டில் (13.8.90) தமிழகத்தைச் சேர்ந்த பார்ப்பனரான ஆர்.கே.லட்சுமணன் தீட்டியுள்ள கேலிச்சித்திரம் இது.

சமூக - பொருளாதார ரீதியாகப் பின்தங்கியவர்கள் என்று வேலைக்கான இடஒதுக்கீடு கேட்பவர்கள் இனி மனவளர்ச்சியில் பிற்பட்டவர் என்று கூறி இடஒதுக்கீடு கேட்பார்கள் — என்ற கருத்துடன் இக் கேலிச்சித்திரம் அமைந்துள்ளது.

தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட மக்களை இழிவுபடுத்தி அவமதிக்கும் பார்ப்பன திமிருக்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?




**He is bluffing just to get the job. He said he was backward not only socially and economically but also mentally!**

படிப்பகம்

www.padippakam.com

தால் நாடு குட்டிச்சுவராகிவிடும் என்று வாதிடுவது அவர்களது மேல்சாதி வெறியைத் தான் காட்டுகிறது.

### சமத்துவம் பேசும் சாதிவெறியர்கள்

"தற்போதைய இடஒதுக்கீட்டு முறை மூலம் மொத்தம் 55% - 60% அரசு பதவிகள் தாழ்த்தப்பட்டோருக்கும் பிற்பட்டோருக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இப்படி தொடர்ந்து ஒதுக்கீட்டை அதிகரித்துக் கொண்டே போனால் என்னாவது? முன்பு தமது முன்னோர்கள் செய்த தவறுக்காக இப்போது முற்பட்ட மாணவர் - இளைஞர்கள் ஏன் சிலுவையைச் சுமக்க வேண்டும்? சமத்துவமின்றி ஜனநாயகம் இருக்க முடியாது. ஆனால் இடஒதுக்கீட்டின் மூலம் இந்தியர் என்ற சமத்துவ நிலை உடைந்து இன்ன சாதிக்காரர் என்ற நிலைமை வந்துவிட்டது. இது ஜனநாயகத்தையே சீரழிப்பதாகும்" என்று பார்ப்பன மேல்சாதி வெறியர்கள் கூச்சலிடுகின்றனர்.

ஓட்டுப் பொறுக்கும் உத்தியோடு மேலும் மேலும் பிற்பட்டோர் சாதிப் பட்டியலை ஆட்சியாளர்கள் விரிவாக்குகின்றனர் என்பது உண்மைதான். இதன்மூலம் இடஒதுக்கீட்டு முறையையே செல்லக்காசாக்கி விட்டனர். ஆனால், முன்பு தமது முன்னோர்கள் கீழ்சாதியினரை அடக்கி தவறு செய்தனர் என்றும் இப்போது அப்படி எதுவுமே இல்லை என்பது போலவும் அப்பாவித்தனமாக வாதிடுவது அப்பட்டமான அயோக்கியத்தனமாகும். அரசு அதிகாரத்திலுள்ள பார்ப்பன - மேல்சாதியினர் நடத்தும் அட்டூழியங்களை ஏராளமான சான்றுகளோடு நிரூபிக்கமுடியும்.

பீகாரைச் சேர்ந்த கீலானந்த்ஜா என்ற பார்ப்பன சாதியைச் சேர்ந்த இளைஞர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண்ணை 1979-ல் கலப்பு மணம் செய்து அரசு வழங்கிய பியூன் வேலையைப் பெற்றார். கீழ்சாதியைச் சேர்ந்த பெண்ணை பார்ப்பனர் திருமணம் செய்த 'குற்றத்திற்காக' பார்ப்பன - மேல்சாதி அதிகாரிகள் அவருக்கு வேலை கொடுக்காமல் விரட்டியடித்தனர். மாநில முதல்வரிலிருந்து பிரதமர்வரை முறையிட்டும், தனது குடும்பத்துடன் டெல்லியில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தியும்கூட அவருக்கு நீதி கிடைக்கவில்லை. இது சமத்துவத்தையா காட்டுகிறது? சமத்துவமின்றி ஜனநாயகமில்லை என்று வாதிடும் கனவான்களே, ஜனநாயகத்தை சீரழித்தது யார்? இது முன்னோர்கள் செய்த தவறா? அல்லது கீலானந்த்ஜா அரசு பதவிக்கு தகுதியற்றவரா?

சமத்துவத்தைப் பற்றி வாய்கிழியப் பேசும் சனாதனிகளே, இடஒதுக்கீடு எதிர்ப்பு கிளர்ச்சியின் போது டெல்லி நேரு பல்கலைக்கழக மேல்சாதி மாணவர்கள், கீழ் சாதியினரின் குலத்தொழிலைச் செய்யுமளவுக்கு நிலைமை முற்றிவிட்டது என்று செருப்பு துடைக்கும் போராட்டம் நடத்தியதை நீங்கள் வாழ்த்தி வரவேற்கவில்லையா? செருப்பு துடைப்பதை அவமானமாகக் கருதும் உங்களது மேல்சாதி வெறியைத்தானே இது காட்டுகிறது. செருப்பு துடைக்கும் போராட்டத்தை ஆதரிக்கும் நீங்கள் அம்மாணவர்களை மலம் அள்ள அனுப்பத் தயாரா?

### முன்னேறியவர்கள் யார்?

அபத்தமான வாதங்களை அடுக்கி பார்ப்பன வெறியை நியாயப்படுத்தும் இந்த அறிவாளிகள் இன்னுமொன்றைக் கூறுகின்றனர். "இடஒதுக்கீடு சலுகை தரப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட சாதியினர் இன்று எவ்வளவோ முன்னேறிவிட்டனர். எனவே இடஒதுக்கீட்டுக்கு குறிப்பிட்ட காலவரம்பு வேண்டும். இதுதவிர பிற்பட்ட, தாழ்த்தப்பட்டவர்கள் முதல்வர்களாகியுள்ளனர். தாழ்த்தப்பட்ட - பிற்பட்டவர்கள் சமூக, பொருளாதார ரீதியாக மட்டுமின்றி அரசியல் அதிகாரத்திலும் பங்கேற்குமளவுக்கு முன்னேறியுள்ளதைத்தான் இது காட்டுகிறது" என்று வாதிடுகின்றனர்.

இல்லை. பொருளாதாரமோ, சமூக - கல்வித்தகுதியோ எதுவானாலும் சாதிரீதியில் கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகவும் இன்னமும் அடக்கி ஒடுக்கிச் சுரண்டப்படுபவர்கள் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களும் நாவிதர், வண்ணார் போன்ற நிலப்பிரபுத்துவ சேவைத்துறை சார்ந்த பிற்பட்ட சாதியினரும்தான். ஆனால் பக்கத்து இலைக்குப் பாயசம் போடுங்கள் என்று இடஒதுக்கீட்டு சலுகை கேட்டு ஆதாயமடைவதுதான் மற்ற சாதிகளின் நோக்கமாக இருக்கிறது.

1987-88-ம் ஆண்டின் புள்ளிவிபரப்படியே நாட்டிலுள்ள 77% முற்பட்ட மற்றும் பிற்பட்ட சாதியினர் 83% வளமான நிலத்தை உடமையாக வைத்துள்ளனர். எஞ்சியவை அரசுக்குச் சொந்தம். அற்ப அளவு நிலம் மட்டுமே தாழ்த்தப்பட்ட மக்களிடம் உள்ளது. தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களிடம் படிப்பு சற்றே அதிகரித்திருந்தாலும் மற்ற சாதியினரின் வளர்ச்சி வேகத்தோடு ஒப்பிடும்போது குறைந்து கொண்டே போகிறது. ஆரம்பப் பள்ளியில் நுழையும் தாழ்த்தப்பட்டோர் குழந்தைகளில் பாதிப்பேர் கூட ஐந்தாம் வகுப்பைத் தாண்டுவதில்லை. வறுமை காரணமாக உழைக்கப் போய் விடுகின்றனர். விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் உயர்கல்வி கற்றபோதிலும்கூட இடஒதுக்கீட்டு செய்யப்பட்டு காலியான அரசு பதவிகளில் கூட அவர்கள் நியமிக்கப்படுவதில்லை.

அதேசமயம் பிற்பட்டோர் பட்டியலில் உள்ள பல ஆளும் சாதிகள் சமூக, பொருளா

---

## தவறுக்கு வருந்துகிறோம்!

அன்பார்ந்த தோழர்களே!

கடந்த 'புதிய ஜனநாயகம்' இதழில் "இட ஒதுக்கீடு: மீண்டும் மேல்சாதி, மேட்டுக்குடிச் சண்டை" என்கிற தலையங்கம் எழுதியிருந்தோம். அதற்கு ஒரு திருத்தமும் அளிக்க வேண்டியுள்ளதெனக் கருதுகிறோம்.

"சமூக உரிமை, கல்வி உரிமை, சொத்துரிமை மறுக்கப்பட்டு தீண்டாமை போன்ற காட்டுமிராண்டித்தனமான ஒடுக்குமுறை சுரண்டல் சமுதாய அமைப்பினால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடக்கி வைக்கப்பட்டிருந்தவர்கள் 'சூத்திர மற்றும் சண்டாள' வர்ணங்களின் வழி வந்த தாழ்த்தப்பட்ட, பழங்குடி சாதிகள் மட்டும்தான். சாதி என்கிற முறையில் தனிச் சிறப்பான முக்கியத்துவம் பெற்று முன்னேற்றப்பட வேண்டிய உரிமை உடையவர்கள் இவர்கள் மட்டும்தான்" என்று கடந்த இதழ் தலையங்கத்தில் எழுதியிருந்தோம்.

ஆனால் ஏறக்குறைய இதே நிலையில் உள்ள வேறு சில சாதிகளும் உள்ளன. வண்ணார், நாவிதர், கொல்லர், குயவர் போன்ற சில சேவைச் சமூகத்தினரும், குறவர் போன்ற சில உதிரிச் சாதியினரும் இப்போது, பிற்பட்ட அல்லது மிகவும் பிற்பட்ட சாதியினராகக் கருதப்படுகின்றனர். தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களைப் போலவே இவர்களும் சாதி என்கிற முறையில் தனிச் சிறப்பான முக்கியத்துவம் பெற்று முன்னேற்றப்பட வேண்டிய உரிமை உடையவர்கள். இதைக் குறிப்பிடத் தவறிவிட்டோம் என்பதை உணருகிறோம். பாரிய இத்தவறுக்காக வருந்துகிறோம்.

— ஆசிரியர் குழு.

---

## 'உத்தமர்' நேருவின் யோக்கியதை!

"பிற்பட்டோருக்கு பொருளாதார ரீதியில் உதவிகள் செய்ய வேண்டுமே தவிர சாதி ரீதியில் அல்ல. எந்த வகையான இட ஒதுக்கீட்டையும் நான் விரும்பவில்லை. சாதி ரீதியான - வகுப்புவாத அடிப்படையில் இடஒதுக்கீடு அமைந்தால் நாம் திறமையும் தகுதியும் வாய்ந்தவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிடுவதாகிவிடும். குறிப்பாக அரசுப் பணித்துறையில் இட ஒதுக்கீட்டை என்னால் ஏற்றுக்கொள்ளவே முடியாது. தகுதியற்ற - இரண்டாம்தர ஆட்களைக் கொண்டு அரசு நிர்வாகத்தையும் கட்டியமைப்பது மடத்தனமானது மட்டுமல்ல; அதனால் நாட்டுக்கு பேரழிவு ஏற்படும்."

- இதுதான் உத்தமர் நேருவின் இடஒதுக்கீடு பற்றிய கண்ணோட்டம். இக்கருத்தைச் சாராம்சமாகக் கொண்டு 1961, ஜூன் 27-ல் மாநில முதல்வர்களுக்கு நேரு கடிதம் எழுதியுள்ளார். இக்கடிதத்தின் சுருக்கத்தை எக்ஸ்பிரஸ் ஏடு வெளியிட்டு, நேருவே இட ஒதுக்கீட்டை எதிர்க்கிறார், அப்புறம் என்ன என்று மேல்சாதி ஆணவத்தோடு கொக்கரிக்கிறது.

காந்திக்குப் பிறகு நேருவை பார்ப்பவர்கள் புகழ்பாடும் சூட்சுமம் இப்போது புரிகிறதல்லவா? பிற்பட்டோரை அரசு நிர்வாகத்துக்குத் தகுதியற்ற - இரண்டாம்தர ஆட்களாக சித்தரிப்பதால்தான் நேருவை 'மனிதருள் மாணிக்கம்' என்கிறார்கள் போலும்!

படிப்பகம்

www.padippakam.com

## பொன்மலை:

★ பழிவாங்குகிறது நிர்வாகம்!

★ துரோகத் தொழிற்சங்கத்தின் ரௌடித்தனம்!

# தொடரும் போராட்டம்!

பொன்மலை பணிமனை சா மில் ஷாப்பில் பணிபுரிந்த லூயிஸ் சவுரிமுத்து என்பவர் வட்டி கொடுமையினால் - வட்டிக்காரர்கள் தாக்கியதால் அவமானம் தாங்காமல் 12.7.90 அன்று தனது வீட்டில் தூக்குப் போட்டுக் கொண்டார். பொன்மலை போலீசு, வட்டிக்காரர்கள், உள்ளூர் தி.மு.க. கட்சிக்காரர்கள் சேர்ந்து இதற்கு ஆதாரமாக உடலில் இருந்த காயங்கள் மற்றும் கயிறு இறுக்கப்பட்டதற்கான கழுத்தில் இருந்த அடையாளங்களை மறைத்தும் இறந்தவரின் குடும்பத்தினரை மிரட்டியும் இயற்கை மரணம் என்று பதிவு செய்து விட்டனர்.

இதை அம்பலப்படுத்தி 13.7.90 அன்று பணிமனை உள்ளே RWU (ரயில் ஒர்க்கர்ஸ் யூனியன்) சுவரொட்டி ஒட்டியது. சுவரொட்டி ஒட்டிய பொழுது இதன் தலைவர் நேச இருதயத்தை SRMU- சதர்ன் ரயில்வே மஸ்தூர் யூனியனைச் சேர்ந்தவர்கள் தாக்கினர். SRMU-வின் போஸ்டர் மீது RWU-வின் போஸ்டர் ஒட்டியதால் - அவ்வாறு ஒட்டாத பொழுது - தாக்கியதாக காரணம் கூறுகிறார்கள். ஆனால், வட்டிச் சுரண்டல் பேர்வழி அலெக்சாண்டர் முதலான




பலர் SRMU தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பதாலேயே - இதை RWU அம்பலப்படுத்தி வருவதாலேயே - திட்டமிட்டு வந்து தாக்கினர்.

தாக்குதலில் ஈடுபட்ட பிலோமின்ராஜ், பரமசிவம் மற்றும் பலரும் ரவுடித் தனத்தின் மூலமே தொழிற்சங்கத் தலைவர்களாக ஆனதையும், ரவுடித் தனத்தை நம்பியே தொழிற்சங்கம் நடத்தி வருவதையும் அம்பலப்படுத்தி RWU பிரசுரம் வெளியிட்டது.

RWU-வின் தொழிற்சங்க நடவடிக்கைகளை முடக்குவதற்காக நிர்வாகமும் முன்னணியாளர்களை வேலை நீக்கம் செய்து தொழிலாளர்களை பீதியூட்ட முயற்சிக்கிறது. RWU-வின் பொதுச் செயலாளர் தோழர் முருகானந்தத்தை வேலை நீக்கம் செய்ததைத் தொடர்ந்து 23.7.90 அன்று தோழர் நேச இருதயத்தையும் முன்னறிவிப்பின்றி நிரந்தர வேலை நீக்கம் செய்துள்ளது. நிர்வாகத்தின் பழி வாங்கும் நடவடிக்கைக்கு எதிராக போராட கூட்டு நடவடிக்கைக்கு அழைத்தும் அனைத்துச் சங்கங்களும் மவுனம் சாதிக்கின்றன. எனினும் RWU, நிர்வாகத்தின் அடக்குமுறைக்கு எதிராகவும், தொழிற்சங்கங்களின் தொழிலாளர் விரோதப் போக்குகளை அம்பலப்படுத்தியும் தொழிலாளர்களின் ஆதரவுடன் தொடர்ந்து போராடி வருகிறது.

தகவல்: RWU பொன்மலை.

---

தார ரீதியாக முன்னேறியுள்ளன என்பது உண்மைதான். ஓட்டுக்கட்சி அரசியலிலும் தேர்தலிலும் செல்வாக்கு செலுத்துமளவுக்கு இவர்கள் வளர்ந்துள்ள போதிலும் அரசு பதவிகளில் - அதிகாரத்தில் முன்னேறிவிட்டதாக கூறிவிட முடியாது. அதற்காகத்தான் இப்போது இடஒதுக்கீடு மூலம் பிற்பட்ட சாதிகள் போட்டி - சண்டையில் இறங்கியுள்ளன.

பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராக இப்படி பிற்பட்ட சாதிகளைச் சேர்ந்த கட்சிகள் உருவானவுடனேயே பிராந்தியவாதக் கட்சிகள், பிரிவினைவாதம், ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து என்று பார்ப்பன 'தேசிய' கட்சிகள் கூப்பாடு போட்டன. இப்போது அரசு பதவிகளிலும் தமது ஆதிக்கத்துக்குப் போட்டியாக வந்துவிட்ட ஆத்திரத்தில், பிற்பட்ட சாதியினர்கூட மாநில முதல்வர்களாக உள்ளதைக் காட்டி அவர்கள் எல்லா துறைகளிலும் - அரசியல் அதிகாரத்திலும் முன்னேறிவிட்டதாக அங்கலாய்க்கின்றனர்.

எனவேதான் தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை ஏற்பதாகக் கூறிக்கொண்டே, பிற்பட்டோருக்கு கூடுதலாக இடஒதுக்கீடு செய்வதை கடுமையாக எதிர்த்தும், அதன்மூலம் எந்தவகையான இடஒதுக்கீடுமே கூடாது என்றும் மேல்சாதியினர் போராடுகின்றனர். இதேபோல தமது தரப்புக்கு பலம் சேர்க்கும் நோக்கத்துடன் தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரால் பிற்பட்ட சாதியினர் இடஒதுக்கீட்டை ஆதரித்து எதிர்ப் போராட்டம் நடத்துகின்றனர். அதே சமயம், முற்பட்ட, பிற்பட்ட சாதியினர் எவரும் தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்கவும் உயிரோடு கொளுத்தவும்கூடத் தயங்குவதில்லை.

### அரசு பதவிகளைக் கைப்பற்றுவதற்கான போட்டி

எனவே, அரசு பதவிகளைக் கைப்பற்றுவதற்காக மேல்சாதியினருக்கும் பிற்பட்ட சாதியினருக்கும், பிற்பட்ட சாதிகளுக்கிடையிலேயும் நடக்கும் தகராறுதான் இப்போது நடக்கும் இடஒதுக்கீடு ஆதரவு - எதிர்ப்பு கிளர்ச்சிகள். பார்ப்பன - மேல்சாதியினர் சாதிவெறியோடு எதிர்ப்பதாலேயே பிற்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை நியாயப்படுத்திவிட முடியாது. உள்ளூர் அளவில் தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக சாதிய ஆதிக்கம் செலுத்துவதில் மேல்சாதியினரை விட பிற்பட்டோரில் உள்ள பலசாதிகள்தான் இன்று முன்னிலை வகிக்கின்றன.

குறிப்பாக வடமாநிலங்களில் யாதவர், குஜ்ஜார், குர்மி, ஷைலன்வார் ஆகிய பிற்பட்டோர் பட்டியலில் உள்ள பெரும்பான்மை சாதியினர்தான் தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டுகின்றனர். இதேபோல கர்நாடகாவில் லிங்காயத்து, ஒக்கலிகா சாதிகளும், ஆந்திராவில் கம்மா, காபு சாதிகளும்தான் தாழ்த்தப்பட்டோரை ஒடுக்கும் முதல் எதிரிகளாக உள்ளனர். நாட்டின் பல பகுதிகளில் தாழ்த்தப்பட்ட கூலி - ஏழை விவசாயிகள் நடத்தும் வர்க்கப் போராட்டங்கள் கூட இத்தகைய பிற்பட்ட சாதி இந்துக்களுக்கு எதிரான போராட்டமாக பல நேரங்களில் திரும்பியுள்ளது. பிற்பட்ட சாதியைச் சேர்ந்த - பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள வறிய விவசாயியாக இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தாக்குதல் நடக்கும்போது அவர் தமது வர்க்கத்துடன் சேருவதில்லை. தமது சாதிக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு அவரும் சாதிய அடக்குமுறைக்குத் துணையாக நிற்பதைத்தான் நாம் பார்க்கிறோம்.

இதுவரை கிராமப்புறத்திலும் விவசாயத்திலும் ஆதிக்கம் செலுத்திவந்த யாதவர், குர்மி, ஷைலன்வார் மற்றும் கம்மா சாதியினர் நவீன விவசாய உற்பத்தியில் ஈடுபட்டு பொருளாதார ரீதியிலும் முன்னேறியுள்ளனர். ஓட்டுக்கட்சி அரசியலிலும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இப்போது அரசு பதவிகளிலும் முற்பட்ட சாதியினருக்குப் போட்டியாக பலம்பெற முயலுகிறார்கள். ஏற்கனவே அரசு பதவிகளில் பெரும்பான்மையாக உள்ள மேல்சாதியினர் தமது ஆதிக்கத்தை இழந்துவிடாதிருக்க எதிர்போராட்டத்தைத் தீவிரமாக்குகின்றனர். இதுதான் இடஒதுக்கீடு ஆதரவும் எதிர்ப்பும் என்ற விவகாரம் முற்றுவதற்கான அடிப்படை. அரசு பதவிகளைக் கைப்பற்றுவதற்கான இந்த நாய்ச்சண்டையை மூடி மறைக்கத்தான் தகுதி - திறமை என்று மேல்சாதியினரும், பார்ப்பனவெறி, சமூக அநீதி என்று பிற்பட்ட சாதியினரும் பெருங்கூச்சல் போடுகின்றனர்.

புரட்சிப் பாதைக்கு மக்கள் திரும்பி விடாதபடி தடுத்து, இப்போதைய அரசியல் அமைப்பிலேயே தாமும் பங்கேற்கும் உணர்வை தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட சாதிகளுக்கு ஏற்படுத்துவதற்கானதுதான் இடஒதுக்கீட்டு சலுகைகள். புரட்சியைத் தடுக்கவும், புரட்சிகர நிலைமை எழுந்தால் ஒடுக்கவுமான அரசு எந்திரத்தில் பங்கேற்பதற்காக நடக்கும் போட்டிதான் இடஒதுக்கீடு ஆதரவு - எதிர்ப்பு கிளர்ச்சிகள். எனவே இந்தச் சண்டையில் நாம் எந்தப் பிரிவையும் ஆதரிக்க முடியாது. இதனால் சமூக நீதியோ, விடுதலையோ கிடைத்துவிடாது.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்தில் இந்தியத் தலையீடு! அம்பலமாகும் இரகசியங்கள்!

இலங்கையில் தலையிடுவதென 1987-லேயே இந்திய மத்திய அமைச்சகம் முடிவு செய்தது. இதற்கான சாத்தியக் கூறுகள் மற்றும் விளைவுகளைப் பற்றி (முன்னாள் அதிபர்) ஜெயவர்த்தனா, அவரது நம்பிக்கைக்குரிய நிலவள மந்திரி காமினி திசநாயகா, கொழும்பு நகர பிரபல வர்த்தகப் புள்ளி சி.டி.ஏ. ஸ்காப்டெர், 'இந்து' நாளேட்டின் உதவி ஆசிரியர் என். ராம் ஆகியோர் கூடி விவாதித்தனர். திசநாயகா இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழுவின் தலைவராக இருந்தார். அதே போல் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழுவின் தலைவராக இருந்த மத்திய என்.கே.பி. சால்வேயை அவர் தொடர்பு கொண்டு இந்திய அரசுத் தரப்பினரை செயலில் ஈடுபடுத்துமாறு கேட்டுக் கொண்டார். இந்த விஷயம் மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டது.

அதிகார பூர்வமாக ஜூன் 12, 1987ல் இந்திய - இலங்கை அதிகாரிகள் கூடிப் பேசினர். ஜூன் 25ல் ''ஜலண்ட் பிரைடு'' என்ற இந்தியக் கப்பல் நிவாரணப் பொருட்களுடன் காங்கேசன் துறைக்கு வந்து சேர்ந்தது. உண்மையில், இந்திய தூதரக அரசியல் செயலாளரான ஹர்திப் பூரி அக்கப்பலில் ரகசியமாகச் சென்றதை மறைக்கும் ஏற்பாடு தான் இது. கரையிறங்கிய அவர் ஈழப் போராளிகளை ரகசியமாகச் சந்தித்து தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டார்.

இதற்கிடையே இந்தியத் தூதர் தீட்சித் கொழும்புக்கு 12 முறை பறந்து சென்று வந்தார். நிவாரண நடவடிக்கை முடிந்த ஒரு மாதத்துக்குப் பிறகு, இலங்கை காபினெட் மந்திரிகளிடம் வந்து உரையாற்றுமாறு அவருக்கு எதிர்பாராத அழைப்பு வந்தது. அதன்படி இலங்கையில் இந்தியத் தலையீடு எந்த முறையில் நடக்க உள்ளது என்பதை அவர் காபினெட் மந்திரிகளிடம் 45 நிமிடங்கள் விளக்கினார். இந்தக் கூட்டத்தில் விவாதமோ எதிர்ப்போ பெயரளவில் தான் இருந்தது. இந்திய எதிர்ப்பாளரான அன்றைய பிரதமர் பிரேமதாசா ஜப்பானுக்குச் சென்ற நேரம் பார்த்து அவசரமாக இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

'பூமாலை' நடவடிக்கை மூலம் உணவுப் பொட்டலம் போடுவது மட்டும் நடக்கவில்லை. அதோடு கூடவே ஜூன் '87ல் சிவில் உடையில் 100 கமாண்டோக்கள் கொழும்புக்கு அனுப்பட்டனர். இந்தியருக்குச் சொந்தமான நட்சத்திர ஓட்டலில் அவர்கள் குடியமர்த்தப்பட்டனர். நான்கு MI-8 ரக ஹெலிகாப்டர்கள் அவர்கள் பணிக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டது. ஆனால் இரகசிய வேலைக்கான இந்த ஆட்கள் குடித்துவிட்டு கும்மாளமிடும் களிவெறியாட்டத்தில் இறங்கியதால், தொல்லைதான் ஏற்பட்டது. இன்னுமொரு கமாண்டோ படை யாழ்ப்பாணத்துக்கு அருகே நிறுத்தப்பட்டது. மூன்றாவது கமாண்டோ படை கப்பலிலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. — இவ்வாறு ஒப்பந்தத்திற்கான ஏற்பாடுகள் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டன.

ஈழ துரோகி பெருமாள், 'அமைதி'ப்படை தளபதி கல்கத்துடன் சதி ஆலோசனை.



### அமைதிப்படையா? ஆக்கிரமிப்புப் படையா?

புலிகளுடன் மோதல் நிலை உருவானதும் எதிரியுடன் பெரும் யுத்தத்திற்குச் செல்வது போல் தயாரிப்புகள் செய்யப்பட்டன. தாக்குதல் படை, முற்றுகைப் படை, உதவிப் படை என்று கிரமமாக பிரிக்கப்பட்டு அமைதிப் படை இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

(புலிகளின் கண்ணி வெடி தாக்குதலால் நிலை குலைந்த) இந்திய ராணுவம் அக்டோபர் மாதத்தில் பெரும் இழப்பைச் சந்தித்தது. மேஜர் ஹரி கிரத் தனது அடிபட்ட பீரங்கிப் படைக்கு உதவுமாறு காலாட் படையை ஏவினார். ஆனால் போதுமான அளவுக்கு ஆயுதங்கள் கைவசம் இல்லை. எனவே அவர் இலங்கைப் படையின் உதவியைக் கோரினார். அதன்படி இலங்கைப் படை தமிழர்கள் மீது குண்டு வீசும் பணியை நிறைவேற்றியது.

புலிகளின் எதிர்தாக்குதலை முறியடித்து, அரசியல் ரீதியில் பணியை விரைந்து நிறைவேற்றி விட்டதாக காட்டுவதற்காக இந்திய ராணுவம் மேலும் கூடுதலாக ஆயுதங்களையும் துருப்புகளையும் இலங்கையில் கொண்டு போய் குவித்தது. நவீன AFV கவச வண்டிகளுடன், ரஷியாவிடமிருந்து வாங்கிய 45 டன் எடையுள்ள T-72 ரக அதி நவீன போர்முனை டாங்கிகளும் அனுப்பப்பட்டன. வடக்கு மாகாண காட்டுப் பகுதியில் செல்வதற்கேற்ற பொருத்தமான டாங்கியாக இது கருதப்பட்டது. இதோடு நகர்ப்புற கொரில்லா இயக்கத்தை அழிப்பதில் பயிற்சி பெற்ற 31வது ஆயுத டிவிசனைச் சேர்ந்த 65வது ஆயுத ரெஜிமெண்டு, டாங்கியின் முன்னணிப் படையாக ஈழத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. மேலும் 20 டன் எடையுள்ள ரஷிய BMP-2 ரக ஆயுத கவச வண்டிகள் ஈழத்தில் குவிக்கப்பட்டது. டாங்கியைப் போல செயல்படக் கூடிய இந்த வண்டிகள் உலகிலேயே மிகச் சிறந்ததாக கருதப்படுகிறது. இந்த வண்டிகளோடு சேர்த்து இரண்டு இயந்திரப் பிரிவு பட்டாலியன் படை அனுப்பப்பட்டது. ஆனால் புலிகளின் மிகச் சாதாரண கண்ணி வெடிகளாலும் இதர திடீர் தாக்குதல்களாலும் அடிக்கடி பெரும் சேதங்கள் ஏற்பட்டன.

தரைப்படை, கடற் படையோடு வான் படையும் அதி நவீன ஆயுதங்களுடன் தாக்குதலை நடத்தியது. பிரெஞ்சு ஜாகுவார் மற்றும் ரஷியாவின் மிக்-25 ரக போர் விமானங்களும் ரஷியாவிடமிருந்து புதிதாக வாங்கப்பட்ட MI-25 ரக ஹெலிகாப்டர் படையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டது. இது தவிர பயணத்திற்கு பயன்படக்கூடிய MI-8 ரக ஹெலிகாப்டர்களில் கூட எந்திரத் துப்பாக்கியும் ராக்கெட் — ஏவுகணைகளும் பொருத்தப்பட்டு ஈழத்துக்கு அனுப்பப்பட்டன.

10 டிவிசன் படைகளும் ஆயுதங்களும் இலங்கைப் போரில் குவிக்கப்பட்டன. அதாவது 30% சிறப்பு படைப் பிரிவுகளும் உலகின் 4வது பெரிய படையின் 10% மனித சக்தியும் இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் குவிக்கப்பட்டன. பம்பாயிலிருந்து வெளிவரும் ''எக்னாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி'' மார்ச் '89 இதழில்,


படிப்பகம்

www.padippakam.com

ராணுவ விவகார எழுத்தாளர் ரவி ரிக்வி என்பவர் 1,02,000 லிருந்து 1,05,000 துருப்புக்கள் ஈழத்தில் குவிக்கப்பட்டதாக எழுதினார்.

புலிகள் ஏ.கே.47 ரக துப்பாக்கியுடன் போரிடுவதை அறிந்ததும் தனிச் சிறப்பான துருப்புகளுக்கும், கமாண்டோ படையினருக்கும் ஏ.கே.47 ரக துப்பாக்கிகள் அளிக்கப்பட்டு இந்திய ராணுவம் பெருமையில் பூரித்து போரிட்டது. இதற்காகவே உளவுப் படை "ரா" போலந்திலிருந்து 7000 துப்பாக்கிகளை 'நல்ல' விலைக்கு வாங்கி வந்தது. அது நேரடியாக இலங்கைக்கு சுங்கச் சாவடி சோதனை ஏதுமின்றி கொண்டு செல்லப்பட்டது.

**புலிகளின் சாகசம்! இந்திய ராணுவம் பீதி!**

புலிகளுக்கு எதிரான போர் மூண்டதும் இந்திய அமைதிப் படையினருக்கு அலவன்சுகள் அதிகரிக்கப்பட்டன. பவுடர் பாலை விட கறந்த பால் சுவையானதென்று ராணுவத்தினருக்காக ராஜஸ்தானிலிருந்து தினமும் கறந்த பால் கறந்தபடியே இலங்கைக்கு கொண்டு செல்லப்பட்டது. பிரயாணிகள் கப்பல்கள் பெரும் வாடகைக்கு அமர்த்தப்பட்டு அதில் காய்கறிகளும் இறைச்சியும் அன்றாடம் கொண்டு செல்லப்பட்டன. ராணுவத்துக்கு தட்டுப்பாடின்றி உணவுப் பொருட்கள் கிடைக்க வேண்டுமென அதிக விலையில் அவை கொள் முதல் செய்யப்பட்டன.

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணக் காடுகளும் புதர்களும் படை வீரர்களுக்கு மிகவும் இடர்ப்பாடாக இருந்தது. கொசுக்களும் பூச்சிகளும் மிகவும் தொல்லைப் படுத்தின. குடி தண்ணீர் மிக அரிய மதிப்புமிக்க பொருளாகி விட்டது. பல யூனிட்டுகளுக்கு ஹெலிகாப்டர் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டது. குளம், குட்டைகள் நிறைந்த பகுதிகளில் கூட படை வீரர்கள் அவற்றைப் பயன்படுத்தவில்லை. ஏனெனில் அவற்றில் புலிகள் பதுங்கியிருந்து தாக்கக்கூடும் என்று அஞ்சினர்.

புலிகள் அதி நவீன 'நேட்டோ' ரக கண்ணி வெடிகளைப் பயன்டுத்தியதாகவும் தொலைவிலிருந்து ரேடியோ உத்திரவு மூலம் அவற்றை வெடிக்கச் செய்ததாகவும் அமைதிப் படையினர் கூறினர். ஆனால், புலிப் படையினர் நூறு, இரு நூறு அடிகள் தூரத்தில் சாதாரண 9 வால்ட் பாட்டரி மூலம் கையால் இயக்கித்தான் கண்ணிகளை வெடிக்கச் செய்தனர். தாங்கள் வைத்த கண்ணிகள் வெடிக்கும் வரை அவ்விடத்தில் புலிகள் இருப்பதைக் காண முடிந்தது.

யாழ் போரில் புலிகளின் இழப்பு 700 முதல் 800 வரை இருக்கலாம். அதன் தலைவர்களில் யாரையும் கொல்லவோ கைது செய்யவோ முடியவில்லை. யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள ஏராளமான காயல்களினூடே அவர்கள் படகுகளில் தப்பிச் சென்று விட்டனர். சில நூறு புலிகளை ஆயுதங்களுடன் கைப்பற்றியதாக கூறப்பட்டாலும் உண்மையில் அவர்கள் புலிகளல்ல. அவர்கள் நிராயுதபாணியான சிவிலியன்கள்; அல்லது கொல்லப்பட்ட தமிழீழ மக்கள்!

இந்தியாவின் மிக நீண்ட யுத்தமாகிய இந்த யாழ் போரில் 1155 படை வீரர்கள் பலியாகினர். அதை விட 3 மடங்கு அதிகமான ராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர். அதிகார பூர்வ தகவலின்படி 300 கோடி ரூபாய் இப்போருக்குச் செலவழிக்கப்பட்டது.

**தமிழர் நலனுக்காக அல்ல;**
**பிராந்திய மேலாதிக்கமே குறி!**

1960களின் இறுதியில் வல்லரசுகளுக்கு ஒப்பீட்டு ரீதியில் பின்னடைவு ஏற்பட்டபோது, பிராந்திய ரீதியில் மேலாதிக்கம் செய்யும் நாடுகளை அங்கீகரிக்கும் போக்கு சர்வதேச ரீதியில் வளர்ந்தது. 1969ன் துவக்கத்தில் அமெரிக்க வெளியுறவுச் செயலாளரான கிஸிங்கர், அமெரிக்காவின் கண்ணோட்டத்தை பின்வருமாறு கூறினார்: "அமெரிக்காவினால் ஆதரிக்கப்படும் பிராந்திய சக்திகள் தங்கள் பிராந்தியத்திலுள்ள கடமைகளை நிறைவேற்ற பொறுப்பேற்க வேண்டும்" இருபதாண்டுகளுக்கு பிறகு இந்திய ராணுவத்தின் மேஜர் ஜெனரல் கே.எஸ். பென்சீ என்பவர் அதை எதிரொலித்தார். "தெற்காசியாவில் இந்தியா தீர்மானகரமான சக்தியாகும். இந்தியாவின் வளர்ந்து வரும் தேவைக்கேற்ப இந்த பிராந்தியத்தில் அமெரிக்கா நடத்தி வரும் ராணுவ நடவடிக்கைகளை இனி இந்தியா மேற்கொள்ள வேண்டியதை கிஸிங்கர் உணர்த்தியுள்ளார்" என்று அவர் இந்திய ராணுவ மதிப்பாய்வு இதழில் (ஜன'89) "இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத் தகுதி பற்றிய ஒரு கணக்கீடு" என்ற கட்டுரையில் குறிப்பிட்டார்.

இதை இந்திய - இலங்கை ஒப்பந்தம் பிரதிபலித்தது. இந்த ஒப்பந்தம் தமிழர் நலனை மட்டும் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. பிரதானமாக இந்திய - இலங்கை உறவுகளில்தான் அது அக்கறை காட்டியது. இந்தியாவின் யுத்த தந்திர நோக்கங்களில் இலங்கையை பொருத்தமாக இணைப்பதை அது கோட்பாடாகக் கொண்டிருந்தது.

1989 டிசம்பர் 31ல் அமைதிப் படையை விலக்கிக் கொள்வதென முடிவாகியது. இந்த தேதி கூட தற்காலிகமானது தான் என்பதில் ராணுவத்தினர் தெளிவாக இருந்தனர். திரிகோண மலையில் நிரந்தரமாக ஒரு படைப் பிரிவை நிறுத்தி வைப்பது, அதற்குத் துணையாக சென்னையில் ஒரு டிவிசன் படையை தயார் நிலையில் வைத்திருப்பது. அவசியமானால் திரும்பவும் படையெடுப்பது என்று திட்டமிடப்பட்டது. இத்திட்டத்திற்கு 'புஷ்பக் நடவடிக்கை' என்று பெயர் சூட்டப்பட்டது. (என்ன காரணத்தாலோ இத்திட்டம் கைவிடப்பட்டது.)

☆ ☆ ☆

தொகுப்பாகக் கூறினால், ஈழப் போராளிகளுக்கு ரகசியமாக ஆயுதமும் பயிற்சியும் அளித்ததும், இந்தியக் கொலைவெறி ராணுவத்தை அமைதிப் படை என்ற பெயரில் இலங்கைக்கும் அனுப்பியதும் தமிழினத்தின் மீது இந்திய அரசுக்குள்ள கருணையினால் அல்ல; தெற்காசிய பிராந்திய மேலாதிக்க நோக்கத்திற்காகத்தான் என்பதை இந்நூல் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. ஒப்பந்தத்தை ஏற்று ஆயுதங்களைக் கையளிப்பதாகக் கூறிய புலிகள் பின்னர் ஏமாற்றி விட்டதாலேயே மோதல் நிலை ஏற்பட்டது என்று அப்பாவித்தனமாக ஆக்கிரமிப்பாளர்கள் கூறுவது எவ்வளவு பெரிய பித்தலாட்டம் என்பதை இந்நூல் தெளிவாக்கிக் காட்டுகிறது.

இந்தியாவின் மேலாதிக்க நோக்கங்களைப் பற்றி நன்கு தெரிந்த போதிலும் கூட இந்திய முதலாளித்துவப் பத்திரிக்கைகள் திட்டமிட்டே மூடி மறைத்துள்ளன. அதைவிட, போபர்ஸ் ஊழலை அம்பலப்படுத்தி "பத்மபூஷண்" விருது பெற்ற இந்து பத்திரிக்கையின் இணையாசிரியர் என்.ராம் இந்திய மேலாதிக்கத்திற்கான சதிவேலைக்கு இடைத்தரகனாகச் செயல்பட்டு ஈழத் தமிழர்களை மட்டுமின்றி இந்தியத் தமிழர்களையும் ஏய்த்து துரோகம் இழைத்துள்ளதற்கு இந்நூல் இன்னுமொரு நிரூபணம்.

இன்று ஈழத்தில் வெளிப்படையாக இனப் படுகொலையை சிங்கள

**புலிகளிடம் உதைப்பட்டு வந்த இந்திய ராணுவம்!**





படிப்பகம்

www.padippakam.com

அரசு நடத்தி வரும் வேளையில், புலிகள் இயக்கத் தலைவர்கள் கிட்டுவும் பாலசிங்கமும் மீண்டும் இந்திய தலையீட்டைக் கோருகின்றனர். புலிகளின் செயல்பாடுகளை விமர்சனமின்றி கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்கும் சிலர், ராஜதந்திரம் என்ற பெயரில் இச் சந்தர்ப்ப வாதத்தை நியாயப்படுத்தவும் செய்கின்றனர்.

கிட்டதட்ட வியட்நாம் போருக்கு இணையாக பெருமளவு துருப்புக்களுடனும் ஆயுதங்களுடனும் நீண்ட காலம் ஆக்கிரமிப்புப் போரை நடத்தி தனது கைக்கூலிகளைக் கொண்டு பொம்மை அரசை நிறுவியது இந்திய அரசு.

அமெரிக்க ஆக்கிரமிப்பை வீறு கொண்டெழுந்து விரட்டியடித்த வியட்நாம் மக்களைப் போலவே, ஈழமக்களின் உறுதியான போராட்டத்தாலும், உலகெங்கும் இந்திய ஆக்கிரமிப்பு அம்பலப்பட்டதாலும் இந்திய அமைதிப் படை தோல்வி முகத்துடன் நாடு திரும்பியது. இன்று வியட்நாமிய மக்கள் மீண்டும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை தலையிட அழைப்பது எவ்வளவு பெரிய மானக்கேடாகுமோ, அதுபோலவே புலிகள் இந்தியத் தலையீட்டைக் கோருவதும் அவமானகரமானது; தமிழர்களின் மானத்திற்கே இழுக்கானது; தமிழர்களின் நலனை அடகு வைக்கக் கூடியது.

ஒருவேளை இந்தியா தலையிட்டாலும் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஒருக்காலும் அங்கீகரிக்காது. தமிழர்களின் உரிமையை சிங்கள அரசின் காலடியில் வைத்து பெயரளவிலான மாகாண சுயாட்சியைப் பெற்றுத் தருவதே அதன் நோக்கமாகும். கடந்த ஏழாண்டுகளாக பல்வேறு இடர்பாடுகளினூடே அளப்பரிய தியாகத்துடன் இன விடுதலைக்காகப் போரிட்டு வரும் ஈழமக்கள், இந்திய ராணுவத் தலையீட்டை எதிர்த்து முறியடிப்பதோடு புலிகளின் சந்தர்ப்பவாதத்தையும் அம்பலப்படுத்தி, தமது சொந்தக் காலில் நின்று ஈழவிடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

○ ○ ○

இந்திய ஆளும் வர்க்கத்தின் பிராந்திய மேலாதிக்கத்தை ஆதரிக்கும் "இந்தியாவின் இலங்கைத் தோல்வி" என்ற இந்நூல் ராணுவத்தின் போர் முறைகளிலும் உளவுத்துறையின் செயல்பாடுகளிலும் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுகிறதே தவிர அதன் நோக்கங்களை எதிர்க்கவில்லை. இருப்பினும் ஈழத் தமிழர்களின் நலன் என்ற பெயரில் இந்தியா நடத்திய ஆக்கிரமிப்பையும் அதன் சூழ்ச்சி - சதிகளையும் அம்பலப்படுத்திக் காட்டும் நோக்குடன் இந்நூலின் சில பகுதிகளை மொழியாக்கம் செய்து வெளியிட்டுள்ளோம். இக் கட்டுரையிலுள்ள தலைப்புகள் எம்மால் இடப்பட்டவை.

— ஆசிரியர் குழு.

# மன்னார்குடியில் மலை முழுங்கிகள்!

கூட்டுறவு சங்கங்கள் மக்களுக்கான சிறந்த ஸ்தாபன முறை. ஆனால், இன்றைய சமுதாய அமைப்பு முறையில் அவை ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளான அதிகாரிகளும், ஓட்டுப் பொறுக்கிகளும் சேர்ந்து கூட்டுக் கொள்ளையிடும் நிறுவனமாக இருக்கின்றன; நிலப்பிரபுக்களுக்கும், ஏகாதிபத்தியங்களுக்குமே சேவை செய்து வருகின்றன. இதற்கு மன்னார்குடி முத்துப்பேட்டையைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் ஊழியர் கூட்டுறவு (கடன் மற்றும் சிக்கன சேமிப்பு சங்கம்) ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

இக்கூட்டுறவு சங்கத்தின் முக்கிய தஸ்தாவேஜுகள் பழைய நிர்வாக செயலர் வசமே உள்ளன. இதைப் பெறுவதற்கு தனி அலுவலரும் எந்தவித சட்டபூர்வ நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்தகால மோசடிகள் மூடி மறைக்க முயற்சி நடப்பதோடு தொடர்ந்து கொள்ளையடிக்க வழி ஏற்படுத்திக் கொண்டும் இருக்கிறார்கள். இதற்கு தனி அலுவலரும் உடந்தையாக இருக்கிறார். இச் சங்கத்தில் நடந்த மோசடிகள் சில வெளிவந்துள்ளன.

● கூட்டுறவு சங்க உறுப்பினர்களிடமிருந்து தேவைக்கு அதிகமாக பங்குத் தொகை வசூலித்து, அவர்களை ஏமாற்றி கையொப்பம் பெற்று அவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டதாக கழிக்கப்பட்டு அபகரிக்கப்பட்டுள்ளது. சங்க பேரேடுகளில் உறுப்பினர்களின் கையொப்பங்கள் தேவைக்கு அதிகமாக ஏமாற்றி பெறப்பட்டுள்ளன.

● மேலப்பெருமழை பள்ளித் தலைமையாசிரியர் திரு. மா.இராசகோபாலன் என்பவரது பங்குத் தொகை அவருடைய கையெழுத்துக்குப் பதிலாக போலி கையெழுத்து இட்டு கையாடல் செய்யப்பட்டுள்ளது.

● பேட்டை நடுநிலைப்பள்ளி உதவியாசிரியர் திரு.முத்துக்கிருட்டிணன் என்பவர் பெயரில் 17.5.88ல் ரூ.3000/- கடன் வழங்கப்பட்டதாகவும் சுமார் ஓராண்டு கழித்து 5.10.89ல் ஒரே தடவையில் திரும்பச் செலுத்தப்பட்டதாகவும் உள்ளது. ஆனால், மேற்படி நபர் இச்சங்கத்தில் கடன் ஏதும் உண்மையில் பெறவில்லை., இதேபோல அப்போதைய உதவிக் கல்வி அலுவலர் பி.செல்வராசு என்பவர் பெயரும் உறுப்பினராக சேர்க்கப்பட்டு மோசடி செய்யப்பட்டுள்ளது.

● கூட்டுறவு சங்கத்தின் உயர்மட்ட அதிகார அமைப்பான மகாசபை ஒப்புதல் பெற்றே ஊழியர்களை நியமிக்க முடியும். ஆனால் எஸ்.ரவீந்திரன் என்ற ஊழியர் மாதம் ரூ.200/- ஊதியம் பெறுவதாக கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. மேலும் மகாசபையின் அனுமதியின்றி ரூ.9000/- செலவில் உறுப்பினர்களில் சிலருக்கு தரமற்ற தோல் பைகள் வழங்கப்பட்டதில் ஊழல் நடைபெற்றுள்ளது.

● இவ்வொன்றியத்தை விட்டுச் சென்று, இச்சங்கத்தில் கடன் பெற்ற முன்னாள் உறுப்பினர்களிடமிருந்து கடன்தொகை வசூல் செய்து கணக்கில் வரவு வைக்கப்படவில்லை. சங்கத்தின் லாப ஈவுத்தொகை உறுப்பினர்களின் கணக்குகளில் இதுவரை வரவு வைக்கப்படவில்லை. மாதந்தோறும் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தவணைத் தொகைகளுக்கு உரிய ரசீதுகள் பல மாதங்களாக வழங்கப்படவில்லை.




கடந்த 1989-90ஆம் ஆண்டின் தணிக்கை அறிக்கையில் இந்த மோசடிகள் அனைத்தும் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கின்றன. இவற்றிற்கெதிராக இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது. எனவே, சங்க உறுப்பினர்களில் சிலர் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி அரசுத்துறை அதிகாரிகளுக்கும் அமைச்சருக்கும் மனு செய்துள்ளனர்.

அதிகாரிகளை தண்டிப்பதற்கோ ஏன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தவறு செய்யும் பொழுது திருப்பியழைத்து தண்டிப்பதற்கோ மக்களுக்கு உரிமை இல்லை; சங்க உறுப்பினர்களுக்கும் இல்லை. எனவே, மேல் முறையீடுகள், மனுக்கள் மட்டுமே பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வழிகோலாது. சங்க உறுப்பினர்கள், சங்கத்தின் ஊழல்களை - பிரச்சினைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்; மக்கள் அதிகாரத்திற்காகப் போராட வேண்டும்.

தகவல்: பு.ஜ.வாசகர் வட்டம்,
வேதாரண்யம்.



படிப்பகம்

www.padippakam.com



போலிகளின் ஆட்சிக்கு ரத்த சாட்சி!





படிப்பகம்

www.padippakam.com



பத்திரிக்கையாளர்களின் முட்டியும் தப்பவில்லை!



# சமூக பாசிஸ்டுகளாக போலிகள்!

இங்கிருக்கும் படங்கள் அனைத்தும் ஆகஸ்ட் 16ம் தேதி கல்கத்தாவில் நடந்த 'பந்த்'தின் போது எடுக்கப்பட்டவை. அத்தியாவசியப் பொருட்கள் விலையேற்றம், மின்வெட்டு, 'ட்ராம்', பேருந்து கட்டண உயர்வு, ஆலைகள் மூடல் வேலையின்மை நிவாரணம் மறுப்பு — இவற்றை எதிர்த்து போராடும் மக்களைத்தான் போலீசு இப்படி அடித்து அவமானப்படுத்துகிறது.

தேர்தல் பாதையை - பாராளுமன்ற ஜனநாயகத்தை - மக்களை புரட்சிக்கு பயிற்றுவிப்பதற்கான களமாக பயன்படுத்தப் போவதாக கூறினார்கள், போலிக் கம்யூனிஸ்ட்டுகள். ஆனால், ஆளும் வர்க்கம், அரசு எந்திரத்துக்கு எதிராக தன்னெழுச்சியாக மக்கள் போராடினால் கூட முதல்வர் ஜோதிபாசுவால் சகித்துக் கொள்ள முடியவில்லை. போலீசை ஏவி போராடும் மக்களின் கைகால்களை உடைத்து சட்டம் - ஒழுங்கை பாதுகாக்கிறார்.

போராட்டம் என்றாலே ''மக்கள் பார்த்துக் கொள்வார்கள்,'' ''சட்டம் அதன் கடமையை செய்யும்'' என்று எம்.ஜி.ஆர், கருணாநிதி பாணியில் 'காம்ரேட்' ஜோதிபாசு மிரட்டுகிறார். ''வன்முறையைத் தூண்டுபவர்களைப் பார்த்து அரசு சும்மா இருக்காது'' என்று சிவந்து போகிறார். தொழில் முறை கிரிமினல்கள், கட்சி குண்டர்கள், போலீசை மக்கள் மீது ஏவி அமைதியை நாட்டுகிறது, ஜோதிபாசு அரசாங்கம். இடதுசாரி அரசாங்கத்தை கவிழ்க்க காங்கிரசு சதி என்று கூப்பாடு போட்டு அரசு வன்முறைக்கு நியாயம் கற்பிக்கிறார், ஜோதிபாசு.

நாயோடு படுக்கைக்கு போனவன் உண்ணியோடு எழுந்திருப்பான் என்பது பழமொழி. மக்களிடமிருக்கும் பாராளுமன்ற ஜனநாயக மாயையை கலைக்கப் போவதாக ஓடோடி நாற்காலியை பிடித்தார்கள், போலிகள். கடைசியில் இவர்கள் அதன் சுகத்தில் மயங்கி போய், அதன் அதிகாரப்பூர்வ விசுவாசிகளாகவும், அடியாளாகவும் முன்னணியில் நிற்கிறார்கள். சொல்லில் சோசலிசம், செயலில் பாசிசம் என்று சமூக பாசிஸ்ட்டுகளுக்கு இலக்கண சுத்தமாக திகழ்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

"அன்பார்ந்த ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம். மக்கள் கலை இலக்கியக் கழகம் மூலமாக காஷ்மீர் பற்றி நடந்த அரங்கக் கூட்டத்தின் வாயிலாகவும் இந்தியாவின் காஷ்மீர் யுத்தம் என்ற புதிய ஜனநாயகம் வெளியீடு மூலமும் எனது சில சந்தேகங்களைத் தெரிவிக்கிறேன். பதில் கூறவும்" என்று கேட்டு யா.ஒத்தக்கடை, ச.சேகர் என்கிற வாசகர் எழுதியுள்ளார். இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பது நமது கடமையும் அவசியமும் ஆகும்; பயனுள்ளதாகவும் இருக்கும். எனவே சிறப்பு முக்கியத்துவம் கொடுத்து இந்த இதழில் அந்த வாசகரின் கேள்விகளுக்கு மட்டும் பதிலளிக்கிறோம். தொடர்ந்து கேள்வி-பதில் பகுதிக்குக் கேள்விகள் அனுப்பும்படி வாசகர்களைக் கோருகிறோம்.

● *மதவெறியைத் தூண்டுவது அரசுதான் என்று கூறும் நீங்கள் தீவிரவாதிகள் மதவெறியைத் தூண்டவில்லை என்கிறீர்களா?*

☆ இல்லை. அப்படிக் கருதவில்லை. காஷ்மீரில் இப்போது ஏறக்குறைய 13 அமைப்புகள், இந்திய அரசுக்கு எதிரான போரில் ஈடுபட்டிருக்கின்றன. இவைகளை இரண்டாக வகை பிரிக்கலாம். இஸ்லாமிய ஆட்சி முறையையும், பாகிஸ்தானோடு காஷ்மீர் இணைவதையும் ஆதரிப்பவர்கள் ஒரு பிரிவினர். ஜமாத்-இ-இஸ்லாம், ஹிஸ்ப்-உல்-முஜாஹிதீன், அல்லா டைகர்ஸ் ஆகியவை இதில் அடங்கும். அரபு நாடுகளில் உள்ள எண்ணெய் 'ஷேக்'குகளும், ஈரான், பாகிஸ்தான் அரசுகளும், குறிப்பாக பாக்-ஐ.எஸ்.ஐ. என்கிற இராணுவ உளவுப்படையும் இந்தக் குழுக்களுக்குப் பின் பலமாக இருந்து, நிதி, ஆயுத, பயிற்சி கொடுக்கின்றனர். காஷ்மீருக்குள் புகுந்து, இராணுவ ரீதியில் ஆக்கரமித்து, பாக்குடன் இணைத்துக் கொள்வதற்காக மதவெறியையும் - மதக்கலவரங்களையும் தூண்டவும், நாசவேலைகளில் ஈடுபடவும் இந்தக் குழுவினர் ஏவிவிடப்படுகின்றன.

பாக்.கைகூலிகளும், மதவெறியர்களுமான இந்தக் குழுக்கள் இவ்வாறு செய்கின்றன என்பதற்காக காஷ்மீரி மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்கமுடியாது. அதற்காகவும், மதச்சார்பற்ற இன உரிமைக்காகவும் போராடி வரும் இன்னொரு பிரிவை ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி (ஜ.கா.வி.மு) பிரதிநிதித்துவப் படுத்துகிறது. இது பாக். தலையீட்டையும், மதவெறி - மதக்கலவரங்களைத் தூண்டுவதையும் எதிர்த்து இயக்கங்கள் நடத்தி வருகிறது. எல்லையோரப் பகுதிகள் தவிர காஷ்மீர் முழுவதும் மக்கள் ஆதரவு பெற்றிருப்பதும் ஜ.கா.வி.மு. தான்.

● *அரசு, பயங்கரவாதத்தைக் கடைப்பிடிக்கிறது என்று கருதும் நாம், தீவிரவாதிகள் அகிம்சை வழியில் சென்றார்களா? ஏ.கே.47 துப்பாக்கிதான் அகிம்சை வழியா?*

☆ இல்லை. 'தீவிரவாதிகள்' அகிம்சை வழியில் செல்கிறார்கள் என்று நாம் சொல்லவில்லை. கடந்த 43 ஆண்டுகளாக காஷ்மீரி மக்கள் சுயநிர்ணய உரிமை கோரிப் போராடுகிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைத்ததெல்லாம் இனதுரோக ஆட்சிகளும், மோசடித் தேர்தல்களும், இனஒடுக்குமுறையும், இராணுவ - துப்பாக்கிக் குண்டுகளும் தான். காஷ்மீரி மக்களின் சுயநிர்ணய உரிமை ஜனநாயக பூர்வமாகவும் - அமைதி வழியிலும் கிடைத்திருக்குமானால் அவர்கள் ஆயுதம் தூக்கவேண்டிய அவசியமே இருந்திராது. எனவே சுதந்திரத்துக்காக, உரிமைக்காக, நீதிக்காக, ஏ.கே.47 ஏந்துவதில் தவறில்லை; அவசியமானதுதான். ஆனால் அரசு பயங்கரவாதப் படையும், பாக். கைக்கூலிகளும் ஆயுதமேந்தியிருப்பது அநீதியானது; ஆதரிக்க முடியாது; எதிர்க்க முறியடிக்க வேண்டியது. இரண்டுமே வன்முறை வழிதானே என்று பார்க்க முடியாது.

● *இந்துக்களிடம் தீவிரவாதிகள் சில நேரங்களில் வீட்டை விட்டு ஓடுமாறும் கடிதம் மூலமாகவும் நேரடியாகவும் மிரட்டுவர், தீவிரவாதிகளால் இந்துக்கடைகள் சூறையாடப்பட்டது; இந்து பெண்களைக் கேலி - கிண்டல் செய்கின்றனர் என்று இந்துக்கள் கூறினார்கள். (இந்தியாவின் காஷ்மீர் யுத்தம் பக்.46) இவர்கள் சுயநிர்ணயத்திற்காகப் போராடுவதாகக் கருதி ஆதரவு தரமுடியுமா?*

☆ உண்மைதான். ஆனால் எல்லா 'தீவிரவாத'க் குழுக்களும் இவ்வாறு செய்வதாகக் கூறமுடியாது. ஏற்கனவே கூறியபடி பாக். கைக்கூலிகளான மதவெறிக் குழுக்கள் மட்டுமே இப்படிச் செய்கின்றன. இந்துக்களை மட்டுமல்ல, முஸ்லீம் பெண்கள் 'பர்தா' அணிவதைக் கட்டாயமாக்கி, முகத்தை மூடாமல் வெளியே வரும் முஸ்லீம் பெண்களின் முகத்திலே அமிலத்தை வீசி எரிப்பது போன்ற மதவெறிச் செயல்களில் கூட அக்குழுக்கள் ஈடுபடுகின்றன. ஆனால் மதச்சார்பற்ற இனவிடுதலைப் போராளிகள் மதவெறிச் செயல்கள் அனைத்தையும் எதிர்க்கின்றனர். குறிப்பாக ஜ.கா.வி.மு. இந்துக்களை கொல்வது, துன்புறுத்துவது போன்றவற்றுக்கு எதிராக ஊர்வலம், பேரணி மற்றும் பிற போராட்டங்கள் நடத்தி வருகிறது. எனவேதான் ஜ.கா.வி.மு. போராளிகளைக் கொன்று ஒடுக்கவும், அதைப்பிளவுபடுத்தவும், மதவெறியைக் கிளப்பித் தனிமைப்படுத்தவும் பாக்.கைக்கூலிகள் முயலுகின்றனர். அதே சமயம், காஷ்மீரை விட்டு ஓடிவந்து விட்ட இந்துக்களின் சொத்து உடமைகளில் ஒரு துரும்பைக்கூட யாரும் கைப்பற்றிக் கொள்ளவில்லை என்று 'இந்திய தேசிய' பார்ப்பன ஏடான 'இந்து'வே எழுதுகிறது என்பதையும் கவனிக்க வேண்டும்.

● ***இராணுவம் அப்பாவி மக்களைக் கொன்றது என்பது உண்மைதான் என்றாலும், அதைக் குற்றமாகக் கருத முடியாது. ஏனென்றால் கலகக்காரர்களை அடக்கும்பொழுது துப்பாக்கி சூடு செய்யும் பொழுது இவன் தீவிரவாதி இவன் அப்பாவி, சிவிலியன், இவன் நோயாளி என்று பார்த்து நடவடிக்கை எடுக்க முடியாதல்லவா?***

☆ இதுதான் ஜாலியன் வாலாபாக் படுகொலையை நடத்திய தளபதி டயர் முதல் பிரேமதாசா வரை பேசும் வாதம். ஆனால் 'காவல் படை - தீவிரவாதிகள் மோதல், சாவுகள்' 'தீவிரவாதிகளுடனான சண்டையில் குறுக்கே சிக்கி சிவிலியன் சாவுகள்' போன்ற கதைகளை நாம் மட்டுமல்ல, இந்திய பார்ப்பன - பனியா ஏடுகளே இப்போது நம்புவதில்லை. ''எல்லையைக் கடக்கமுயன்ற பாக் ஊடுருவல்காரர்கள் கட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பது பொய்தான். அவர்கள் பாக். சிறையிலிருந்து துரத்தப்படும் வங்கதேசிகள் அல்லது இந்தியர்கள் தாம்'' என்று பஞ்சாப் பாசிசக் கொலைப்படையின் முன்னாள் தளபதி ரெபைரேவே ஒப்புக் கொண்டுள்ளார். ''சீக்கியரைப் பழி வாங்க, பயபீதியூட்டவேண்டும்; சீக்கியக் கிராமங்களில் புகுந்து கண்ணில் படுபவர்களை எல்லாம் கட்டுத் தள்ளுங்கள்'' என்று தமக்கு உத்திவு வந்ததாக பஞ்சாப் உயர்போலீசு அதிகாரி சாம்லால் ஒப்புக் கொண்டுள்ளார்.

இதே போலத்தான் காஷ்மீர் மீர்வைஸ் ஃபரூக் சவ ஊர்வலத்தின் மீது துப்பாக்கி சூடு நடத்திப் பலரைக் கொன்று பாடம் புகட்டும்படி உத்திரவு போட்டுச் செய்தனர். காஷ்மீரில் உள்ள இந்திய இராணுவம் ஓர் ஆக்கிரமிப்புப் படைதான். எனவே போரில் அது இழப்புகளைச் சந்திக்கும் போதெல்லாம் சிவிலியன்களைப் படுகொலை செய்து பழிதீர்த்துக் கொள்ளும் வக்கிர - வெறியோடு செயல்படுகிறது. அமெரிக்க இராணுவம் வியத்நாமில் நடத்திய மை-லாய்ப் படுகொலை, இந்திய இராணுவம் ஈழத்தில் நடத்திய வல்வெட்டித்துறைப் படுகொலை போன்று காஷ்மீரிலும் நடக்கின்றன. இந்திய இராணுவ அதிகாரிகளே இதை ஒப்புக் கொண்டுள்ளனர்.






படிப்பகம்

www.padippakam.com

## காஷ்மீர் போராளிகள்:

- **இந்துக்களை தாக்கவில்லையா?**
- **பயங்கரவாதத்தை தூண்டவில்லையா?**
- **பாகிஸ்தானுக்கு காட்டிக் கொடுக்கவில்லையா?**

## — அவர்களையா ஆதரிப்பது?

அதற்காக போலீசு மற்றும் கிரிமினல் குற்றவாளிகளைக் கொண்ட 'அதிரடிகொலைக் குழுக்கள்' கட்டி ஏவிவிடப்பட்டுள்ளன.

● ***காஷ்மீர் அரசு இந்துக்களுக்கு ஆதரவாக இருந்தது உண்மைதான். காரணம் காஷ்மீரில் இந்துக்கள் சிறுபான்மையினர். எந்த ஒரு அரசும் சிறுபான்மை மக்களுக்குத்தான் பாதுகாப்பாக இருக்க வேண்டும்; இதுதானே நல்லது?***

☆ ஜம்மு காஷ்மீரின் மக்கள் தொகையில் தான் இந்துக்கள் சிறுபான்மையினர். அதாவது 32% இந்துக்களும் 64% முஸ்லீம்களும் உள்ளனர். ஆனால் அரசு உயர் நிர்வாகத்திலும், அதிகாரத்திலும் இந்துக்களே மிகமிகப் பெரும்பான்மை இடத்தைக் கைப்பற்றிக் கொண்டுள்ளனர். அதே போலத்தான் மத்திய அரசு நிறுவனங்கள், தொழில்களிலும் இந்துக்கள் (ஏறக்குறைய 79 - 85%) மிகமிகப் பெரும்பான்மையினராக அதிகாரம், நிர்வாகத்தில் உள்ளனர். ஆகவே சிறுபான்மையினரது அதிகாரம், ஆதிக்கத்திலிருந்து பெரும்பான்மையினருக்குத்தான் பாதுகாப்புத் தேவையாயிருக்கிறது. ஆகவே இந்திய இராணுவம் காஷ்மீரில் போரிடுவது, சிறுபான்மையினரின் உயிரையும் உடமையையும் பாதுகாப்பதற்காக மட்டுமல்ல; அவர்களது அதிகாரம், ஆதிக்கத்தையும் பாதுகாக்கவும் நீட்டிக்கவும் தான்.

● ***பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தேசிய சுயநிர்ணய உரிமையை வழங்கு என்று கூறும் நீங்கள் பிரிவினையைத் தானே தூண்டுகிறீர்கள்? மாவட்டம், தாலூகா, ஊர், வார்டு வாரியாகப் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமைகேட்டால் அதுவும் உங்கள் பார்வையில் சரிதானா? 1000 பேர்கள் சேர்ந்துகொண்டு பிறர்பொருளைத் திருடுவது சரிதான் என்று அறிவின்மையின் காரணமாக சொன்னாலும் சுயநிர்ணயம் கொடுத்துவிடு என்றுதானே கூறுகிறீர்?***

☆ மிகவும் நியாயமான, ஜனநாயக - பூர்வமான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை மிகவும் மோசமாகக் கொச்சைப்படுத்தும் கேள்வி இது. மாவட்டம், தாலூகா, ஊர், வார்டு வரியாகவும், 1000 பேர்கள் சேர்ந்த திருட்டுக் கூட்டத்துக்கும் சுயநிர்ணய உரிமை கோருவதையா செய்கிறோம். இல்லை. சுயநிர்ணய உரிமையை மறுப்பதற்கு எந்தக் காரணமும் கூறமுடியாத போது இந்தக் கொச்சையான வாதம் பிறக்கிறது.

பொதுவான மொழி, பொதுவான பண்பாடு, பொதுவான பொருளாதார அமைப்புக் கொண்ட பொதுவான பூகோளப்பகுதியில் வாழும் ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களின் சுயநிர்ணய உரிமை நியாயமானது. ஐக்கிய நாடுகள் சபையும் இதை அங்கீகரித்துள்ளது; இதை ஏற்று இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகள் கையொப்பமிட்டுள்ளன. ஆனால் அவை தம் சொந்தநாட்டில் சுயநிர்ணய உரிமைகோரித் தேசிய இனங்கள் போராடினால் இராணுவத்தை ஏவி ஒடுக்குகின்றன.

பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தேசிய சுயநிர்ணய உரிமையைக் கோருவதாலேயே பிரிவினையைத் தூண்டுவதாகி விடாது. விவாகரத்து உரிமையை அங்கீகரித்துக் கோருவதால் எல்லாத் தம்பதிகளும் பிரிந்துபோய் வாழவேண்டும் என்று கூறுவதாகி விடுமா? ஜனநாயக பூர்வமான. சமத்துவ உறவை உத்தரவாதம் செய்வதற்கான ஒரு கோரிக்கைதான். ஒரு மனைவி விவாகரத்தையே கோருவதோ, ஒரு இனம் பிரிந்து போவதையே கோருவதோ, இன்னொரு தரப்பு ஜனநாயகபூர்வமாக, சமத்துவமாக நடந்து கொள்வதைப் பொருத்தது. விவாகரத்து உரிமை பெற்ற மனைவியோ, சுயநிர்ணய உரிமை பெற்ற தேசிய இனமோ பிரிந்து போய்விடுவார்கள் என்று ஏன் அஞ்சவேண்டும்? ஜனநாயகபூர்வமாக நடக்காதவர்களுக்குத்தான் இந்த அச்சம் ஏற்படுகிறது.

● ***காஷ்மீர் என்பது ஒரு கத்தி. அது இந்தியா என்ற உறையுள் பாதுகாப்பாக இருக்கிறது. உறையை விட்டுப் பிரிந்து தனியாக கத்திமட்டும் இருப்பது எவ்வளவு ஆபத்தோ அதைப்போல் காஷ்மீர் தனியாக இருப்பதும் ஆபத்துதான். நாளை இந்தியாவே அதைக்கண்டு பயப்படக்கூடும். அதனால் அதை நமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது. கத்தியும் துருப்பிடிக்காது; உறையும் பிரிந்துவிடாது இருக்கும். நாளை பாகிஸ்தான் கூட அதைக் கண்டு பயப்படும் அல்லவா?***

☆ வேடிக்கைதான்! ஆசியாவிலேயே மிகவும் பலம்வாய்ந்த, மிகவும் நவீன ஆயுதங்களைக் குவித்துள்ள, அணுகுண்டுகள் ஏவுகணைகள் தயாரிக்குமளவு முன்னேறியுள்ள நாடுகளில் இரண்டான இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் காஷ்மீரினால் ஆபத்து என்பது வளமான - வேடிக்கையான கற்பனைதான்! உலகம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டு காலனிகளை வைத்திருந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியம் முதல் சமீபத்தில் குவைத்தைக் கைப்பற்றிக் கொண்டுள்ள ஈராக் வரை ஆக்கிரமிப்பாளர்கள் அனைவரும் இப்படித்தான் தமது அக்கிரமங்களை நியாயப்படுத்தினர்.

அதுசரி! பெரும்பான்மை மக்களின் விருப்பத்துக்கு எதிராக ஒரு தேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதுதான் மிகப் பெரிய ஆபத்து! பலகோடி நிதியும், உயிரையும் பலியிட்டு நடத்தும் இந்தக் காஷ்மீர் யுத்தம் இறுதியில் நமது உள்நாட்டு நெருக்கடியாகவே வெடிக்கும்.

● ***காஷ்மீர் மக்களுக்குப் பூரண சுதந்திரம் இருக்கிறது. எல்லா வகையான உரிமையும் அவர்களுக்கு உள்ளது. அவர்கள் போராடுவது அவர்களுக்கு நல்லதல்ல. இவ்வளவு தூரம் சுதந்திரத்தை ஒருவேளை சுயநிர்ணயம் மூலமாக அமையும் அரசுகூட வழங்குமா?***

☆ ''இந்தியர்களுக்கு ஆளத்தெரியாது; ஆகவே சுதந்திரம் தரமாட்டோம்'' என்று ஆங்கிலேய காலனியவாதிகள் கூறி வந்தது நினைவிருக்கிறதா? ஆடு நினைகிறதென்று ஓநாய்க்கு ஏன் அக்கறை? வங்கதேசத்தைப் பிரித்தபோதும், பிறகும் இதுபற்றி இந்தியா எப்போதாவது நினைத்ததுண்டா? இவற்றை விட முக்கியமான கேள்வி காஷ்மீரி மக்கள் இப்போது சுதந்திரமாக வாழுகின்றனரா? என்பதாகும். காஷ்மீருக்கான சிறப்புரிமை தரும் சட்டம் என்படும் 370 உண்மையில் காஷ்மீரி இனதுரோகிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைதானே தவிர வேறொன்றுமில்லை. அங்கே இருப்பதெல்லாம் இராணுவச் சட்டமும், இராணுவ ஆட்சியும்தான். பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய மாநிலங்களில் ஒன்றாகவே ஜம்மு - காஷ்மீரை வைத்துள்ளார்கள். எது எவ்வாறயினும், எந்தவொரு தேசிய இனமக்களும் தமது சொந்த அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு வாழ்க்கையைத் தீர்மானித்துக் கொள்ளுவது அவர்களது அடிப்படை உரிமை. எவ்வளவு நல்லநோக்கமுடைய தானும் வெளியார் அவற்றைத் தீர்மானிப்பது சகித்துக் கொள்ளமுடியாது. காட்டுமிராண்டித் தனமானது.

● ***மதவெறியை முறியடிப்போம் என்று முழக்கமிடும் நீங்கள் தமிழ்நாட்டில் உள்ள ஒரே ஒரு முஸ்லீமை, தீவிரவாதிகளுக்கு பாக். ஆயுதம் கொடுப்பது தவறு என்று மனப்பூர்வமாக சொல்லவைக்க முடியுமா?***

☆ ஏன் முடியாது! இந்தியாவிலேயே மிகப்பெரிய பத்திரிக்கை நிறுவனமான ''டைம்ஸ் ஆஃப் இந்தியா''வைச் சேர்ந்த நாளேடு ''தி இண்டிபெண்டன்ட்'' கடந்த மாதம் ஒரு கருத்துக்கணிப்பு நடத்தியது. அதன்படி 78% முஸ்லீம்கள் காஷ்மீர் தனி நாடாவதை எதிர்த்துள்ளனர்; காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு போலீசு ஒடுக்குமுறை, பேச்சுவார்த்தை ஆகிய இரண்டு வழிகளையும் மேற்கொள்ளும்படி 36% முஸ்லீம்களும்; தீவிரவாதிகளுடன் பேசுவதை மட்டும் மேற்கொள்ளும்படி 36% முஸ்லீம்களும்; போலீசு ஒடுக்குமுறையை மட்டும் மேற்கொள்ளும்படி 18% முஸ்லீம்களும் கருத்துக் கூறியுள்ளனர். இந்தப் புள்ளிவிவரங்களை முழுமையாக ஏற்காவிடினும் கனிசமான முஸ்லீம்கள் இந்தியாவின் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றனர் என்று நம்புவதற்கு இடமுண்டு.



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

நாகாலாந்தில் தேசிய சுயநிர்ணய உரிமைக்குப் போராடி வரும் நாகா தேசிய சோசலிஸ்ட் கவுன்சிலின் இளைஞர் அமைப்பான, நாகா இளைஞர் விடுதலை முன்னணியின் அண்மைக்கால செயல்பாடுகளைக் கண்டு ஆட்சியாளர்கள் பீதியில் உறைந்து போயுள்ளனர். வட்டிக் கடைக்காரர்கள், வர்த்தக சூதாடிகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்யும் இந்த இளைஞர்கள், அவர்களுக்கு எச்சரிக்கை நோட்டீசு கொடுக்கின்றனர். திருந்தாதவர்களுக்கு அபராதம் விதித்து தொகையைப் பறித்து எடுப்பதோடு, காட்டிக்கொடுப்பவர்களைச் சுட்டுக் கொல்லவும் செய்கின்றனர். அவர்களது கவனம் இப்போது ஊழல் கொள்ளையில் ஈடுபட்ட ஒட்டுப் பொறுக்கிகளின் மீது திரும்பியுள்ளது. டியாமரன் ஆவ், சோங்சென் ஆகிய இரு முன்னாள் மந்திரிகளுக்கு இப்போது எச்சரிக்கை நோட்டீசு வந்துள்ளது. தமது ஊழல் குற்றங்களுக்கு 40 நாட்களுக்குள் விளக்கம் தராவிடில் தண்டனை வழங்கப்படும் என்று இளைஞர் முன்னணி எச்சரித்துள்ளது. அடுத்த பட்டியலில் தம் பெயர் இருக்குமோ என்ற பீதியில் முன்னாள் - இந்நாள் மந்திரிகள் இப்போது தலைநகரில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மேற்கு வங்கம் பாட்டா நகரில் அமைந்துள்ள பாட்டா செருப்பு ஆலை கடந்த சில மாதங்களாக மூடிக் கிடக்கிறது. அண்மையில் நிர்வாகம் - அரசு - தொழிற்சங்கம் ஆகிய முத்தரப்பினரிடையே நடந்த பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பந்தம் கையெழுத்தாகி மீண்டும் ஆலை செயல்படத் துவங்கியது. மே.வங்க 'இடதுசாரி' அரசும் பாட்டா தொழிற்சங்கத்தின் தலைமைச் சங்கமான சி.ஐ.டி.யு. வும் வழக்கம் போலவே துரோக ஒப்பந்தத்தை தொழிலாளர்கள் மீது திணித்தன. இதை ஏற்க மறுத்து பாட்டா தொழிற்சங்கச் செயலாளரும், சி.ஐ.டி.யு. வின் பிரதிநிதியுமான ராமின் சின்ஹா, ''இது அநீதியான ஒப்பந்தம்; முதலாளிகளுக்கு தொழிலாளர்களை அடகு வைக்கும் துரோகத்தனம்'' என்று அம்பலப் படுத்தி போர்க்கொடி தூக்கியுள்ளார். இதனால் சி.ஐ.டி.யு. தலைமை தாங்கும் பாட்டா தொழிலாளர் சங்கமே இரண்டாகப் பிளவு பட்டுப் போயுள்ளது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், நேற்று வரை சி.ஐ.டி.யு.வில் அங்கம் வகித்த தொழிற்சங்க நிர்வாகிகளே தலைமையின் துரோகத்தனத்தை தோலுரித்துக் காட்டுகின்றனர். ''பாட்டாவின் செருப்பு உற்பத்தி பெருகி விற்பனைத் தேக்கமடைந்த நேரம் பார்த்து சி.ஐ.டி.யு. வேலை நிறுத்தத்தை துவங்கியது. இடைப்பட்ட காலத்தில் 86 லட்சம் செருப்புகளை விற்பனை செய்து தனது நெருக்கடியைப் போக்கிக் கொள்ள பாட்டா நிர்வாகத்துக்கு சி.ஐ.டி.யு. உதவி செய்துள்ளது'' என்று வெளிப்படையாக சாடுகின்றனர். போலிக் கம்யூனிஸ்ட்டுகள் டாட்டா - பாட்டாக்களின் கூட்டாளிகளாகி விட்டதை புரட்சியாளர்கள் அம்பலப்படுத்தினால் அதை 'சி.ஐ.ஏ. சதி' என்று அணிகளை ஏய்க்கும் 'மார்க்சிஸ்டுகள்' தங்கள் அணிகளே இப்போது துரோகத்தனத்திற்கு எதிராக கலகம் செய்வதை எப்படி நியாயப்படுத்தப் போகிறார்கள்?




''பாட்டா செருப்புகளைப் புறக்கணியுங்கள்; தொழிலாளர் போராட்டத்தை ஆதரியுங்கள்!'' — கல்கத்தாவிலுள்ள பாட்டா செருப்புக் கடை முன்னே போராடும் தொழிலாளர்களின் சுவரொட்டி, சுவரெழுத்துப் பிரச்சாரம்.

பம்பாயில் காங்கிரசு முதல்வர் சரத்பவார் பயங்கரவாத சட்டத்தைக் கொண்டு வந்து தொழிலாளர்களை அடக்குவதை எதிர்க்கும் ஜனதா தளத்தினர், அதே சட்டத்தை பீகாரில் ஏவி போராடும் விவசாயிகளை ஒடுக்குகின்றனர். மத்திய பீகார் மாவட்டங்களில் ரிசர்வ் போலீசும் துணை ராணுவப் படைகளும் குவிக்கப்பட்டு இடதுசாரி புரட்சிகர விவசாய சங்கங்களின் ஊழியர்கள் வேட்டையாடப் படுகின்றனர். இப்பயங்கரவாத நடவடிக்கைக்கு ராணுவக் கும்பல் ''ரிக்ஷாக்'' நடவடிக்கை என்று பெயர் சூட்டியுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இதுவரை 200-க்கும் மேற்பட்ட விவசாய சங்க செயல்வீரர்கள் சிறையிடப் பட்டுள்ளனர். இதோடு கூடவே சாதி வெறி நிலப் பிரபுக்களின் ஆயுதம் ஏந்திய படைகளும் தாக்குதல் நடத்துகின்றன. ராஜீவ் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட கறுப்புச் சட்டங்களை நீக்கப் போவதாக மாய்மாலம் செய்த புதிய ஆட்சியாளர்களின் ஜனநாயக முகவிலாசம் இதுதான்!

அசாம் ஒப்பந்தம் கையெழுத்தாகி ஐந்தாண்டுகள் ஆகியும் இன்னமும் நிறைவேற்றப்படாததை எதிர்த்து, அண்மையில் அசாம் மாணவர் சங்கத்தினர் பெட்ரோலிய எண்ணெய் போக்குவரத்துக்குத் தடை விதித்துப் போராடி வருகின்றனர். ''பிரகதிஷீல் அஞ்சலிக் மோர்ச்சா'' என்ற பெயரில் இதர கட்சிகளுடன் கூட்டணி அமைத்து அசாம் மக்களின் ஆதரவோடு ஒப்பந்த நகல்களை எரித்து ஆர்ப்பாட்டங்களைத் தொடர்கின்றனர். இப்போராட்டத்தை ஆதரிக்கும் 'தீவிரவாத' அமைப்பான அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி, ஆகஸ்ட் 15-ஐ ''போலிச் சுதந்திர'' நாளாக அறிவித்து, ''காலனிய காலச் சுரண்டலைத் தீவிரப் படுத்துவதை அறிவிக்கும்'' இந்நாளை புறக்கணிக்கக் கோரியது. அதன்படியே அசாமின் பல பகுதிகளில் ஆகஸ்ட் 15 அன்று கறுப்புக் கொடிகள் பறந்தன. பஞ்சாப் காஷ்மீர் பிரச்சினைக்கு பாகிஸ்தானைக் காரணம் காட்டும் ஆட்சியாளர்கள் அசாம் பிரச்சினைக்கு எதைக் காட்டுவது என்று புரியாமல் விழிபிதுங்கி நிற்கிறார்கள்.

காஷ்மீரில் கட்டவிழ்த்து விடப்படும் அரச பயங்கரவாத அடக்குமுறையை எவ்வளவுதான் மூடி மறைக்க முயன்றாலும் இந்திய ஆட்சியாளர்களால் முடியவில்லை. கடந்த ஜூலை மாதத்தில் லாரி ஓட்டுனர் ஒருவரை ராணுவம் சுட்டுக் கொன்றதை எதிர்த்து மாநிலம் முழுவதுமுள்ள வாகன ஓட்டிகள் ஒருநாள் கண்டன வேலை நிறுத்தம் செய்தனர். ஆகஸ்ட் மாத துவக்கத்தில் போராளிகளைப் பிடிப்பது என்ற பெயரில் ராணுவக் கும்பல் அப்பாவி மக்கள் மீது கண்மூடித் தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி 17 பேரைக் கொன்றது. உண்மையில் தாக்குதல் நடத்திவிட்டு தப்பியோடி விட்ட போராளிகள் மீதான ஆத்திரத்தில் மக்களைப் பழிவாங்கும் நடவடிக்கையே இது. இதேபோல கடந்த ஆகஸ்ட் மாதத் துவக்கத்தில் டடிகாட் என்னுமிடத்தில் 24 சிவிலியன்களை ராணுவம் சுட்டுக் கொன்றது. இதோடு அப்பகுதியில் வீடுகளையும் மாட்டுக் கொட்டகைகளையும் தீயிட்டுக் கொளுத்தி அட்டூழியம்



படிப்பகம்

www.padippakam.com

புரிந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக பெண்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக பாலியல் வன்முறையை ஏவியுள்ளது. இந்த உண்மைகளை ராணுவ உயரதிகாரிகளே ஒப்புக்கொண்டு, 'ராணுவத்தில் ஒழுக்கமும் கட்டுப்பாட்டுணர்வும்' குறைந்து விட்டதாக இப்போது ஒப்பாரி வைக்கின்றனர்.

டெல்லி, இந்தியாவின் தலைநகரம் மட்டுமல்ல, வரதட்சிணைப் படுகொலைகளுக்கும் அதுதான் தலைநகரம். ஆணாதிக்க வெறியர்கள் வரதட்சிணைக்காக புது மணப்பெண்களை மிகவும் குரூரமான முறையில் கொல்வதாக மத்திய மந்திரியே நாடாளுமன்றத்தில் வெட்கமின்றி ஒப்புக் கொண்டுள்ளார். 1987-ல் 99-ஆக இருந்த வரதட்சிணைப் படுகொலைகள் 1989-ல் 110-ஆக உயர்ந்துள்ளது. இவ்வாண்டில் கடந்த 6 மாதங்களில் மட்டும் 79 கொலைகள் நடந்துள்ளன. வரதட்சிணைக் கொடுமையை ஒழிக்க வக்கற்ற ஆட்சியாளர்கள், மகளிர் நலனுக்காக தனியாக கமிஷன் அமைக்கப் போகிறார்களாம்! வெட்கக் கேடு!

அரியானா மாநிலத்தில் கோஸ்லி நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில், ஆகஸ்ட் 17 அன்று தனது தாயுடன் பயணம் செய்த 17 வயது பெண்ணை இரண்டு ரயில்வே போலீசார் கற்பழிக்க முயற்சித்தனர். அவர்கள் கூச்சல் போடவே,



அப்பெட்டியிலிருந்த இதர பயணிகள் அக்காமவெறியர்களைப் பிடித்து கோஸ்லி நகர போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். இச்செய்தி பரவியதும் ஆயிரக்கணக்கான பகுதி வாழ் மக்கள் போலீஸ் நிலையத்தின் முன் திரண்டு, அப்போலீசாரின் மூஞ்சியில் கரி பூசி வீதியில் ஊர்வலமாக இழுத்து வரக் கோரினர். போலீஸ் அதிகாரிகள் மறுக்கவே ஆத்திரமடைந்த மக்கள் போலீஸ் நிலையத்தைத் தாக்கி அதன் ஒரு பகுதியை தீயிட்டு எரித்து, சாலை மறியலிலும் இறங்கினர். ஆத்திரமடைந்த போலீசார் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி தமது கூட்டாளிகளைக் காப்பாற்றி உள்ளனர்.

ரஷியாவின் முன்னாள் அதிபர் பிரஷ்னேவுக்கு அதன் அடிவருடி நாடான போலந்து, 1974-ல் அந்நாட்டின் மிக உயர்ந்த ராணுவ விருதை அளித்து கௌரவித்தது. இன்று பொதுமக்கள் நிர்பந்தம் காரணமாக அந்த விருதை திரும்பப் பெற்றதோடு பிரஷ்னேவை ஆக்கிரமிப்பாளனாகவும் சாடியுள்ளார், போலந்து அதிபர் ஜாருஜெல்ஸ்கி. இதில் வேடிக்கை என்னவென்றால் இங்குள்ள போலிக் கம்யூனிஸ்டுகள் பிரஷ்னேவையும் ஜாருஜெல்ஸ்கியையும் நேற்றுவரை சோசலிச சிற்பிகளாக, கம்யூனிச தலைவர்களாக சித்தரித்தனர். இன்று ஜாருஜெல்ஸிகி சோசலிஸ்டா? அல்லது பிரஷ்னேவ் சோசலிஸ்டா? என்று புரியாமல் போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளிலுள்ள அணிகள் குழம்பிப் போயுள்ளனர்.





அணுஉலை எதிர்ப்பு ஊர்வலம்
உள்ளே: விஞ்ஞானி மேனன்

கேரளாவின் மரபியல் சாரா எரிசக்தி மற்றும் ஊரக தொழில் நுட்பத் துறையில் விஞ்ஞானியாக பணியாற்றி வந்தார், பேராசிரியர் ஆர்.வி.ஜி. மேனன். கேரளாவில் அணுசக்தி நிலையங்களை அமைக்க 'இடதுசாரி' அரசு முடிவு செய்திருப்பதை எதிர்த்து அவர் ''மாத்ரு பூமி'' நாளேட்டில் கட்டுரைகள் எழுதினார். ''மேலை நாடுகளே அணுசக்தியால் ஏற்படும் அபாயகரமான விளைவுகளை உணர்ந்து அவற்றைக் கைவிடும் போது இடதுசாரி அரசு அணுசக்தி நிலையங்களை அமைப்பது மக்கள் விரோதச் செயல்'' என்று அம்பலப்படுத்திக் காட்டினார். ஆத்திரமடைந்த போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் நாயனார், விஞ்ஞானி மேனனைப் பதவி நீக்கம் செய்து வேறு இடத்துக்கு மாற்றி வஞ்சம் தீர்த்துக் கொண்டுள்ளார். அரசு பணியாளர் விதியை மீறி பத்திரிகையில் கட்டுரை எழுதி, அரசின் கொள்கையை மக்கள் மத்தியில் பகிரங்கமாக விவாதம் செய்துள்ளார் என்று குற்றம் சாட்டி போலிக் கம்யூனிஸ்டுகள் தமது நடவடிக்கையை நியாயப்படுத்துகின்றனர். விஞ்ஞானி மேனனைப் பழிவாங்கியதைக் கண்டித்தும், அணுசக்தி நிலையங்கள் நிறுவுவதை எதிர்த்தும் சுற்றுச் சூழல் இயக்கத்தினர் வாயில் கறுப்புத் துணியைக் கட்டிக் கொண்டு அண்மையில் ஊர்வலம் நடத்தி போலிகளின் முக விலாசத்தை தோலுரித்துக் காட்டினர். ரஷியாவில் செர்னோபில் அணு உலை விபத்து மூலம் பல்லாயிரக் கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். இங்கே ரஷிய எடுபிடிகள் அதே வழியில் சாவு வியாபாரம் செய்யக் கிளம்பி விட்டனர்.

## 'அமைதிப்படை' விருது - ஓர் அவமானச் சின்னம்

இந்திய 'அமைதிப்படை'யின் கமாண்டராக ஈழத்தில் மூன்றாண்டுகள் பணியாற்றியவர், லெப்டினன்ட் ஜெனரல் சர்தேஷ் பாண்டே. அவர் ஆற்றிய சேவைக்காக ''வசிஷ்ட சேவா'' மற்றும் ''உத்தம் யூத் சேவா'' பதக்கங்களைப் பெற்றவர். இதன் காரணமாக காலாட்படையின் டைரக்டர் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றவர். அண்மையில், தமக்கு அளிக்கப்பட்ட விருதுகளையும், பதக்கங்களையும் பாண்டே திருப்பிக் கொடுத்து விட்டார். இந்திய அமைதிப் படையின் மீதும் அதன் செயல்பாட்டின் மீதும் பரவலாக விமர்சனமும் எதிர்ப்பும் கிளம்பியுள்ளதே இதற்குக் காரணம் என்று அவர் கூறியுள்ளார். பொது மக்கள் கருத்தும் நிர்பந்தமும் வலுக்கும் போது ஆதிக்க வெறியர்கள் தரும் உயர்ந்த பரிசுகளும் பதக்கங்களும் அவமானச் சின்னமாகிப் போவதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

இரண்டாம் உலகப் போரில் ஜப்பானிய பாசிசம் வீழ்ந்த 45-வது ஆண்டு தினமான, கடந்த ஆகஸ்ட் 15 அன்று ஜப்பானின் பாசிச சர்வாதிகாரி, டோஜோவும் அவனது யுத்தக் கிரிமினல்களும் புதைக்கப்பட்டுள்ள யாசுகுனி சமாதிக்குச் சென்று ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் பிரார்த்தனை நடத்தி உள்ளனர். 1985-ல் அரசு தரப்பில் அந்நாளைய பிரதமர் நாகசோனே முதன்முதலாக இச்சமாதிக்குச் சென்ற போது, ஜப்பானிய பாசிசத்தால் பாதிக்கப்பட்ட சீனா, வட கொரியா, தென் கொரியா ஆகிய நாடுகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு இப்போது 13 காபினெட் மந்திரிகளும், 198 சபை உறுப்பினர்களும் டோஜோ சமாதிக்கு சென்று அஞ்சலி செலுத்தியுள்ளனர். உலகப் போரில் வீழ்ச்சி அடைந்த ஜப்பானும், ஜெர்மனியும் இன்று பொருளாதார ரீதியில் முன்னேறி விட்டதாக முதலாளித்துவ வாதிகள் பெருமையுடன் குறிப்பிடுகின்றனர். ஆனால் இந்நாடுகள் மீண்டும் யுத்த வெறிப் பிடித்து பாசிசத்தை நோக்கி முன்னேறுவதையே நிலைமைகள் சுட்டிக் காட்டுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

# உயிர்க் கொல்லிகளா? பூச்சிக் கொல்லிகளா?

ஆந்திர மாநிலத்தின் பிரகாசம் மாவட்டத்தைச் சேர்ந்தவர், விவசாயி ராமையா. அவரும் அவரது எல்லூரு கிராம விவசாயிகளும் பணப்பயிரான பருத்தியைச் சாகுபடி செய்பவர்கள். மூன்றாண்டுகளுக்கு முன்பு பிரகாசம் மாவட்டத்தில் பருத்திப் பயிரை இனம் புரியாத வெள்ளைப் பூச்சிகள் வந்து தாக்கின. என்ன மருந்து தெளித்தாலும் இந்தப் பூச்சிகள் அழியவில்லை. மாறாக, பயிர்தான் அழிந்தது. மனமுடைந்து போனார் விவசாயி ராமையா. இந்தப் பருவத்தில் நமக்கு நட்டம்தான்; அடுத்த பருவத்திலாவது விளைச்சல் கிடைக்காதா என்று கடன்மேல் கடன் வாங்கி மீண்டும் பருத்தியைப் பயிரிட்டார். மீண்டும் வெள்ளைப் பூச்சிகள் வந்து தாக்கின. திரும்பவும் கடன்வாங்கி பூச்சி மருந்து அடித்துப் பார்த்து ஓய்ந்து போனார், ராமையா. பருத்தி விவசாயத்தோடு சேர்த்து அவரும் நொடிந்து போனார். கடன் கொடுத்தவர்கள் நெருக்கினார்கள். அவமானம் தாங்காமல் பூச்சி மருந்தைக் குடித்து ராமையா தற்கொலை செய்துகொண்டு மாண்டு போனார்!

எல்லூரு கிராமத்தில் தற்கொலை செய்து கொண்டது ராமையா மட்டுமல்ல; அவரைப் போலவே பத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் வாழவழியின்றி தற்கொலை முடிவைத் தேடிக் கொண்டார்கள். "முன்பெல்லாம் தற்கொலை என்றால் தூக்கு மாட்டிக் கொள்வார்கள். இப்போது ரொம்ப சுலபம். பருத்திக்கு அடிக்கிற பூச்சி மருந்தைக் கொஞ்சம் குடித்தால் போதும். போய்ச் சேர்ந்திடலாம்" என்று வேதனையோடு கூறினார் அக்கிராமத்தைச் சேர்ந்த விவசாயி.

"இந்த மாதிரி தற்கொலையெல்லாம் வேண்டுமென்றே, தெரிந்தே செய்து கொள்வது. ஆனா புதிதுபுதிதாக வரும் உரம் பூச்சி மருந்துகள் உண்ணும் உணவை விஷமாக்கி நமக்குத் தெரியாமலேயே நம்மை அன்றாடம் கொன்றொழிக்கிறது. மாட்டுக்கும் மனுஷனுக்கும் என்னென்னவோ இனம் புரியாத நோயெல்லாம் வருகிறது" என்று ஆத்திரத்தோடு சொன்னார் இன்னொரு விவசாயி.

விஞ்ஞான அறிவற்ற பாமர விவசாயிகளின் முட்டாள் தனமான பேச்சு என்று அவர் கூறியதை நிராகரித்துவிட முடியாது. அவரது முடிவு அனுபவரீதியானது தான் என்றாலும் இது முற்றிலும் உண்மையே. நவீன உரங்கள், புழு - பூச்சி மருந்துகளால் விளையும் பயிரும் உண்ணும் உணவும் மேலும் மேலும் நஞ்சாகி வருகிறது.

டி.டி.டீ. - எனப்படும் பூச்சி மருந்து நமது நாட்டில் மிக அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது. சிறிதளவு டி.டி.டீ. நமது உடலில் சேர்ந்தால் போதும். குடலையும் ஈரலையும் கடுமையாகப் பாதிக்கும். இதயத்தின் தசைகளும் சுரப்பிகளும் இயங்குவது தடைப்படும், புற்று நோயும் வரும். நாட்டின் பல்வேறு பகுதிகளில் டி.டி.டீ. பெருக்கத்தால் குடிநீரே நஞ்சாகிப் போயுள்ளது. ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5 மில்லி அளவு இருக்க வேண்டிய டி.டி.டீ. இந்தியாவில் 14.5 மில்லி அளவுக்கு இருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன.

நுவாகிரான், செவின், மாலத்தியான் பாரத்தியான், எல்டிரின், என்ட்ரின், பாலிடால் போன்ற பல்வேறு வகையான பூச்சி மருந்துகள் நமது நாட்டில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றால் பூச்சிகளை விட மனிதர்களுக்குத்தான் அதிக ஆபத்து. கர்நாடகாவில் தும்கூர் வட்டாரத்திலுள்ள விவசாயிகளுக்கு கடந்த ஆண்டில் இனம் புரியாத மூட்டு நோய் தாக்கியது. பாரதியான், எல்டிரின் பூச்சி மருந்து தாக்கிய மீன், நண்டு முதலானவற்றை உண்டதால் இந்த நோய் ஏற்பட்டதாக பின்னர் தெரியவந்தது.

1977-ல் உத்திர பிரதேசம் ஹர்தோய் - லக்கிம்பூரில் பி.எச்.சி. எனும் பூச்சி மருந்தால் நஞ்சாகிப் போன தானியத்தை உண்ட பல விவசாயக் குடும்பங்கள் வலிப்பு நோயால் தாக்குண்டன. 1983ல் ராஜஸ்தானில் அலுமினிய பாஸ்பைடு என்ற பூச்சி மருந்து நச்சுப்படுத்திய உணவை உண்ட 35 பேர் மாண்டனர். இந்த பூச்சி மருந்து தெளிக்கப்பட்ட தாவரங்களைத் தின்ற பசுவின் பாலில் கூட விஷம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

ஏகாதிபத்திய நாடுகளைவிடக் குறைவாகவே இந்தியாவில் பூச்சி மருந்து பயன்படுத்தப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு இந்தியனின் உடலிலும் மேலைநாட்டுக் காரனை விட அதிக அளவு நஞ்சு படிந்திருக்கிறது. தமது நாட்டில் தடைசெய்யப்பட்ட மனித உயிர்க் கொல்லிகளை, பூச்சி மருந்து என்ற பெயரில் ஏகாதிபத்தியங்கள் நமது நாட்டில் கொண்டு வந்து கொட்டுவதே இதற்குக் காரணம். உதாரணமாக, மாலத்தியான் என்ற பூச்சி மருந்து மேலைநாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த பூச்சி மருந்தின் உலகளாவிய மொத்த உற்பத்தியில் 60% பங்கு இந்தியாவில்தான் பயன்படுத்தப் படுகிறது.

மேலும் மேலும் உரம், பூச்சி மருந்துகளுக்காக ஏகாதிபத்தியங்களைச் சார்ந்திருக்க வேண்டிய நோக்கத்திற்காகவே இங்கு 1960களில் பசுமைப் புரட்சித்திட்டம் கொண்டு வரப்பட்டது. புதியபுதிய ரகங்கள் அறிமுகமாயின. கூடவே புதியவகை பூச்சிகளும் பெருகின. அவற்றை ஒழிக்கவும் விளைச்சலைப் பெருக்கவும் உரம், பூச்சி மருந்துகளைப் பயன்படுத்துவதும் பெருமளவில் அதிகரித்தது. இன்னும் சொல்லப் போனால் குறிப்பிட்ட உரம் - பூச்சி மருந்து இல்லாமல் குறிப்பிட்ட பயிரை சாகுபடி செய்யவே முடியாது என்கிற நிலைக்கு இந்திய விவசாயிகள் தள்ளப்பட்டனர்.

அதன்பிறகு இந்தப் பூச்சிக் கொல்லி மருந்துகளால் பூச்சிகள் அழியாமல் எதிர்ப்புச் சக்தியைப் பெற்றுவிட்டன. மீண்டும் புதிய ரக பூச்சிக் கொல்லி மருந்துகள் வந்து குவியத் தொடங்கியது. 1957ல் 24 வகை பூச்சிகள் மட்டுமே பூச்சிக் கொல்லி மருந்துகளை எதிர்க்கும் சக்தி பெற்றிருந்தன. 1985ல் 528 வகை பூச்சிகள் எதிர்ப்பு சக்தியைப் பெற்றுவிட்டன. ஆந்திரா - பிரகாசம் மாவட்டத்தில் எந்த மருந்தடித்தாலும் வெள்ளைப் பூச்சிகள் அழியாததற்கு இதுவே காரணம். கடைசியில் பூச்சிகள் சாகவில்லை. பூச்சி மருந்தைத் தின்று விவசாயிகள்தான் தற்கொலை செய்து கொண்டார்கள்.

ஏகாதிபத்தியங்களின் கொள்ளை லாப வெறிக்காக இங்கு கொட்டப்படும் உரம் - பூச்சி மருந்துகளால் பாதிக்கப்படுவது பயிரும் விவசாயிகள் மட்டுமா? இல்லை. இந்திய விவசாயமும், கைத்தொழிலும், நிலமும் சுற்றுச் சூழலும் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளன.

★ முன்பெல்லாம் கோதுமையுடன் 'பதுவா' என்ற கீரைச்செடி ஊடு பயிராக விவசாயிகளால் பயிரிடப்பட்டது. உரம் - பூச்சி மருந்துகளை மிக அதிகமாகப் பயன்படுத்தியதன் விளைவாக இப்போது அந்த கீரைச் செடியே வளர்வதில்லை. வேறு சில பகுதிகளில் கோதுமைக்குப் பதில் இக்கீரைச்செடி அசுரத்தனமாக வளர்ந்து பரவியதால் அதை அழிப்பதாக புதிய பூச்சி மருந்து தயாரிக்கப் பட்டது.

★ உரம் - பூச்சி மருந்துகளை அதிகமாகப் பயன்படுத்தி வருவதால் சில வகை நாணல், கோரைப் புற்கள், கற்றாழை முதலானவை அழிந்து விடுகின்றன. கர்நாடகா, ஒரிசா மாநில விவசாயிகள் கூடை பாய் முதலான கைத்தொழில் பொருட்களைச் செய்து விவசாயம் பொய்த்த காலங்களில் கூட இன்று பிழைக்க முடியாமல் போய்விட்டது.

★ குறிப்பிட்ட பயிருக்கான பூச்சி மருந்துகள் இதர பயிர்களின் விளைச்சலைக் கடுமையாகப் பாதிக்கின்றன. உதாரணமாக ஒரு வட்டாரத்தில் பெரும்பாலான விவசாயிகள் நெல் பயிரிடும் போது மற்றவர்கள் கரும்பு பயிரிட்டால், கரும்பு விளைச்சல் இதனால் பாதிக்கப்படுகிறது. நவீன ஆராய்ச்சிப் பண்ணைகள் வைத்து விவசாயம் செய்யும் அமெரிக்காவிலேயே இத்தகைய ஒற்றைப் பயிர் - பூச்சி மருந்துகளால் ஆண்டுக்கு 400 கோடி டாலர் மதிப்புள்ள விளைச்சல் பாதிக்கப்படுகிறது.

★ தொடர்ச்சியாக உரம் - பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதால், விவசாயிகளின் நண்பனாகிய மண்



படிப்பகம்

www.padippakam.com



அமோக விளைச்சல்! பூச்சியா? தானியமா?

புழு, வண்ணத்துப்பூச்சி, தேனீக்கள் முதலானவை படிப்படியாக அழிந்து போகின்றன. இதனால் மகரந்த சேர்க்கை உரிய பருவத்தில் நடக்காமல் தாமதப்படுவதோடு சுற்றுச் சூழலும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது.

★ பூச்சிக் கொல்லி மருந்துகளின் எதிர்விளைவாக புதியவகை களைகள் பெருகத் தொடங்கிவிட்டது. நிலம் சாரத்தை இழந்து நாளடைவில் விவசாயத்துக்குப் பயன்படுத்த முடியாதபடி மாறிவிடுகிறது. பசுமைப் புரட்சித் திட்டத்திற்குப் பிறகு அதிக அளவில் உரம் - பூச்சி மருந்துகளைப் பயன்படுத்திய அரியானா மாநிலத்தின் சில பகுதிகளில் பயிர் நிலங்கள் சதுப்பு நிலங்களாக மாறி வருவதாக விவசாய ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

இருந்தாலும் என்ன? நமது நாட்டில் மேலும் மேலும் உயிர்க் கொல்லிகளான பூச்சி மருந்துகள் கொண்டுவந்து கொட்டப்படுகிறது. உலகளாவிய உற்பத்தியில் 77% டி.டி.டி. நமது நாட்டில் தான் பயன்படுத்தப்படுகிறது. பி.எச்.சி. எனப்படும் பூச்சி மருந்து 94% இந்தியாவில் தான் கொட்டப்படுகிறது. பூச்சி மருந்துகளால் ஏற்படும் பேராபத்துக்கு போபாலில் நடந்த விஷவாயுப் படுகொலை ஒரு முன்னெச்சரிக்கை. ஆனாலும் இந்திய அரசின் கடந்தகால நடவடிக்கைகளும் நிகழ்கால துரோகத்தனங்களும் இத்தகைய ஆபத்திலிருந்து மக்களைக் காக்க முடியாது என்பதையே நிரூபிக்கின்றன.

பூச்சி மருந்துகளால் விளையும் ஆபத்துக்களைப் பற்றிய எல்லா எச்சரிக்கைகளையும் இந்திய அரசு வேண்டுமென்றே கபடத்தனமாக அலட்சியம் செய்து வருகிறது. பன்னாட்டு பகாசுர நிறுவனங்களும் தரகு அதிகார முதலாளிகளும் வீசியெறியும் எலும்புத் துண்டுகளைக் கவ்விக் கொண்டு விசுவாசமாக வாலாட்டிக் கொண்டு சேவை செய்து வருகிறது. பூச்சி மருந்துகளைக் கொண்டு ஏகாதிபத்தியங்கள் இந்திய மக்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் படுகொலை செய்வதற்கு, இந்திய அரசு உடந்தையாய் இருந்ததற்கு எவ்வளவோ சான்றுகள் உள்ளன. அரசாங்கப் பட்டியலில் 342 புழு - பூச்சி மருந்துகள் உள்ளது. அவற்றில் 80க்கும் மேற்பட்டவை வெளிநாடுகளில் தடை செய்யப்பட்டவை. ஆனால் உயிர்க் கொல்லிகளான இத்தகைய பூச்சி மருந்துகளைக் கொண்டு வந்து கொட்டும் கிடங்காகவும் சோதனைக் களமாகவும் நமது நாடு மாறிவிட்டது.

★ என்ட்ரின், பாரத்தியான் போன்றவை மட்டுமல்ல; மிகமிக ஆபத்தான 2-4-5 டீ என்ற வகை பூச்சி மருந்துகள் இங்கே தாராளமாக இறக்குமதி செய்யப்படுகிறது. ஜப்பான், ருஷ்யா, இத்தாலி போன்ற நாடுகள் இதை தடை செய்துள்ளன. இந்த 2-4-5-டீ வகை பூச்சி மருந்துகள்தான் இரசாயன யுத்தத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

★ ஐதராபாத்திலுள்ள 'இக்ரிசாட்' எனும் ஏகாதிபத்திய ஆராய்ச்சி நிறுவனம் 100 ஏக்கர் கம்பி வேலி போட்டுக் கொண்டு தனி நாடு போலச் செயல்படுகிறது. உள்ளே என்ன ஆராய்ச்சி நடக்கிறது என்பதை மேற்பார்வையிடவோ, கிரிமினல் குற்றங்கள் நடந்தால் விசாரிக்கவோ, தண்டிக்கவோ இந்திய போலீசுக்கும் கோர்ட்டுக்கும் கூட உரிமையில்லை.

★ இந்துஸ்தான் சிபா - கெய்கி என்ற ஏகாதிபத்திய நிறுவனம் ஐந்தாண்டுகளுக்கு முன்பு பூனா அருகில் 35 இந்திய அப்பாவி விவசாயிகளை வயலில் நிறுத்தி வைத்து, தொடர்ந்து நான்கு நாட்கள் புதிய வகை பூச்சிக் கொல்லி மருந்தை விமானம் மூலமாகத் தெளித்து சோதனை நடத்தியிருக்கிறது.

இவையெல்லாம் காட்டுவதென்ன? பரந்துபட்ட மக்களின் சாவுக்குக் காரணமான நச்சு மருந்துகளைத் தடை செய்வதற்குப் பதில், பரவலாகவும் அதிக அளவிலும் விற்பனை செய்வதற்கு ஏகாதிபத்தியங்களுக்கு இந்திய அரசு உடந்தையாய் இருப்பதைத்தானே?

"இல்லை; நாட்டில் 800 வகையான புழு - பூச்சிகள் பயிர்களை நாசம் செய்கின்றன. ஆண்டு உற்பத்தியில் 5000 கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாய விளைபொருட்களை அவை பாழாக்கி விடுகின்றன. எனவே உற்பத்தியைப் பெருக்கவும், இழப்பைத் தவிர்க்கவும் பூச்சி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டியது அவசியமாயுள்ளது" என்று மக்கள் விரோத ஆட்சியாளர்கள் வாதிடுகின்றனர்.

இது எந்த அளவு மோசடித்தனமானது என்பதற்கு இந்திய பருத்தி விவசாயமே சான்றாக உள்ளது. இந்தியாவில் பயன்படுத்தப்படும் மொத்த பூச்சி மருந்துகளில் 45% பருத்தி விவசாயத்துக்குத்தான் உபயோகிக்கப்படுகிறது. ஆனாலும் பருத்தியைத் தாக்கும் வெள்ளைப் பூச்சிகளை இம் மருந்துகளால் அழிக்க முடியவில்லை. மாறாக, பிரகாசம் மாவட்டத்தில் பருத்தி விவசாயமும், விவசாயிகளும் தான் அழிந்தனர். இதில் கொடுமை என்னவென்றால், வெள்ளைப் பூச்சிகள் பெருகியபோது தடை செய்யப்பட்ட 3 வகை மருந்துகளை ஏகாதிபத்திய நிறுவனங்கள் புதிதாக விற்பனை செய்ய இந்திய விவசாய அமைச்சகமே அங்கீகரித்து விசுவாசமாக சேவை செய்துள்ளது.

ஆனால் மக்கள் நலனுக்கான சோசலிச ஆட்சி நிலவிய மாவோவின் சீனத்தில் இத்தகைய பூச்சி மருந்துகளால் ஏற்படும் பேரழிவை உணர்ந்து அவற்றைத் தடை செய்ததோடு, மாற்று உயிரினங்களைக் கொண்டு புழு - பூச்சிகளை ஆபத்தின்றி அழிக்கும் முறைகளை உருவாக்கினார்கள். பயிர்களை அழிக்கும் பூச்சிகளுக்கு எதிராக வேறுவகை புழு, பூச்சிகள், பறவைகள் மற்றும் பிராணிகளைப் பயன்படுத்தும் ஆக்கபூர்வ முறையினால் விவசாயம் முன்னேறியது. உரம் - பூச்சி மருந்துகளால் ஏற்படும் பேராபத்தும் தவிர்க்கப்பட்டது. ஆனால் கொள்ளையே குறியாகக் கொண்டுள்ள இந்தியத் தரகு முதலாளிகளும் ஆட்சியாளர்களும் மனித உயிர்க் கொல்லிகளை தடையின்றி இறக்குமதி செய்யும் விவசாயத்திட்டங்களையும் கொள்கைகளையும்தான் கொண்டுள்ளனர். இதனால் சுற்றுச் சூழலையும் உணவையும் நஞ்சாக்கி, மனித இன விருத்தியில் குறைபாடுகளை ஏற்படுத்தியும், பலவித நோய்களைப் பரப்பியும் தலைமுறை தலைமுறைக்கான பேரழிவை உண்டாக்குகின்றனர்.


இனியும் இந்திய விவசாயிகள் இக்கொடுமைகளைச் சகித்துக் கொண்டிருப்பதில் நியாயமில்லை. உரம் பூச்சி மருந்துகளின் விலைகளைக் குறைக்கக் கோருவதோடு, ஆபத்தான பூச்சிக் கொல்லிகளைத் தடைசெய்யவும், அதனால் ஏற்பட்ட இழப்புகளுக்கு நட்ட ஈடு கோரியும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். மனித சமூகத்திலேயே உள்ள புழு - பூச்சிகளான ஏகாதிபத்தியங்களையும் அதன் அடிவருடிகளையும் ஒழித்துக்கட்ட பெரும்படையாய் அணிதிரள வேண்டும்.

● மனோகரன்.

படிப்பகம்

www.padippakam.com

தந்தை குத்புதீன்



# போலீசு கொட்டடியில்...

மகன் சாபார்ஸ்



"பீபிஜான் என்ற முஸ்லீம் தாயை நிர்வாணமாக்கி மின்விசிறியில் தொங்கவிட்டது போலீசு."

"மகனையே சொந்த அம்மாவிடம் உடலுறவு கொள்ளுமாறு நிர்பந்தித்தது போலீசு."



படிப்பகம்

www.padippakam.com



தாய் பீபிஜான்,

அது நடந்து ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டது. அந்த அவமானம் அவர்களை நிரந்தரமாக நடைபிணங்களாக்கி விட்டது. "என் அம்மாவிடம் உடலுறவு கொள்ளுமாறு என்னை நிர்பந்தித்தது, போலீசு" என்று உடைந்து போய் அழுகிறார், சாபார்ஸ் என்ற அந்த முஸ்லீம் இளைஞன். "அந்த அவமானத்திலிருந்து சாவு ஒன்றுதான் என்னை விடுவிக்கும்" என்று எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டு அடிமனதிலிருந்து முணுமுணுக்கிறார்.

அவருடைய தாய் 45 வயது பீபிஜான் குத்புதீன், அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவேயில்லை. யாருடனும் பேச மறுக்கிறார். எவ்வளவோ கேட்டுக் கொண்ட பிறகு பத்திரிகையாளர்களிடம் ஓரிரு வார்த்தைகள் அழுதுக் கொண்டே கூறினார். "எனக்கு நீதி வேண்டும்" "அந்த போலீசு அதிகாரிகள் தண்டிக்கப்படவில்லை என்றால், நான் அந்த போலீசு நிலையம் எதிரிலேயே போய் தற்கொலை செய்து கொள்வேன்" என்று கூறி அழுகிறார்.

இந்த ஏழை முஸ்லீம் குடும்பத்திடம் போலீசு மிருகங்கள் ஏன் அப்படி நடந்துக் கொண்டது? சாபார்ஸ் இளம் மனைவி கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 12ந் தேதி இறந்து போனார். வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தி சாபார்ஸும் அவரது குடும்பத்தினரும் அப்பெண்ணை கொலை செய்து விட்டனர் என்று போலீசில் புகார் கொடுத்தார், பெண் வீட்டுக்காரர்

பீபிஜான் குடும்பத்தினரோ மருமகள் தற்கொலைதான் செய்துக் கொண்டார் என்றும் அதற்கான காரணமாக வேறு தகவலையும் கூறுகின்றனர்.

ஆரம்பத்திலேயே அவர் இத்திருமணத்திற்கு மறுத்து, துபாயில் தம் சகோதரிகளைப் போல வசதியாக வாழவே விரும்பியதாகவும், தமக்கு உடம்பில் வெண்குஷ்டம் இருந்ததால் இப்படி ஒன்றுமில்லாத குடும்பத்தில் கட்டி வைத்து விட்டதாக சொல்வார் என்றும் கூறுகின்றனர்.

இதில் உண்மை எது என்பதை தீர விசாரித்து குற்றவாளிகளை கோர்ட்டில் ஒப்படைக்க வேண்டியதுதான் போலீசின் வேலை. ஆனால் போலீசே சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டதும் அல்லாமல், மிருகத்தை விட கீழ்த்தரமாக நடந்து கொண்டது.

உண்மையில் நடந்தது இதுதான்! விசாரணை இல்லாமல், இறந்தவரின் கணவரான சாபார்ஸ் என்ற முஸ்லீம் இளைஞனை அடித்து நொறுக்கினர். அவரை தனியாக ட்ராம்பே போலீசு நிலையத்திற்கு இழுத்துச் சென்று மனைவியை கொலை செய்ததாக ஒப்புக் கொள்ளுமாறு மிருகத்தனமாக அடித்தனர்.

அவர் மறுக்கவே, அவரது தாயார் பீபிஜான் குத்புதீனை போலீசு நிலையத்திற்கு அழைத்து வந்து நிர்வாணமாக்கினர். மின் விசிறியில் தலைமுடியை முடிச்சு போட்டு தொங்கவிட்டனர். மகனை அந்த அறைக்கு இழுத்துச் சென்று தங்கள் வக்கிரத்தைக் காட்டி ரசித்தனர். "என் தாயை அந்த கோலத்தில் பார்த்து, போலீசு கேட்கும் இடங்களில் எல்லாம் கையெழுத்து போட சம்மதித்தேன்...." 'அப்படி செய்யாதே' என்று அந்த அவலநிலையிலும் என் தாய் எனக்காக அழுதாள். பிறகு, என் தாயை நிர்வாணமாக அணைத்துக் கொள்ளுமாறு என்னை சித்திரவதை செய்தனர். நான் மறுத்தேன். இன்ஸ்பெக்டர் தஷ்ரத் அவாத் உத்திர விட எஸ்.ஐ. அருண்சைக் என் கையை இழுத்து என் தாயின் உடல் முழுக்க வைத்தார். பிறகு சித்ரவதை செய்து அதே போல் உடலுறவு கொள்ள நிர்ப்பந்தித்தார்' என்று விம்மலுக்கு மத்தியில் கொடூரத்தை அவர் நினைவு கூர்கிறார்.

இன்ஸ்பெக்டர் தஷ்ரத் அதிகார முறைகேடுகள் மூலம் வீட்டுமனை ஆக்கிரமிக்கும், வாடகைதாரர்களை வெளியேற்றும் சமூக விரோத 'ரியல் எஸ்டேட்' கும்பலுக்கு அதிகாரப்பூர்வ அடியாளாக வேலை செய்பவன்.

அவ்வாறான இவனது நடவடிக்கைகளுக்கு பணிய மறுத்த தியோனர் புறநகர் பகுதி பகவான், மணி ஷா குடும்பம், செம்பூர் பீம்நகர் பகுதி மாலன் கோவிந் குடும்பம், விதவை லீலாபாய் ஆகியோரை நடு ரோட்டில் இழிவுபடுத்தி, பெண்களை வயிற்றில் உதைத்தும், தலைமுடியை இழுத்தும் அவமானப்படுத்தியவன். இவன் வரதட்சணைக் கொடுமைக்கு எதிராக கொதித்தெழுந்து தண்டித்தான் என்பது எவ்வளவு பெரிய பித்தலாட்டம்!

பெண் வீட்டார் என்று கூறிக் கொண்டு புகார் கொடுத்த அந்நபர் இன்ஸ்பெக்டர் தஸ்ரத்தின் சட்ட விரோத செயல்களுக்கு பினாமியாக இருந்து சிறை தண்டனை அனுபவிக்கும் விசுவாசி! அந்த ரௌடியின் சொல்லுக்கு தான் இன்ஸ்பெக்டர் ஆடியிருக்கிறார்.

போலீசு சட்டப்பூர்வ சமூக விரோத கும்பல், அமைப்பு ரீதியான அரசு வன்முறை கும்பல் என்பது மட்டுமல்ல மகத்தான மனிதபண்பாடுகளையே அழிக்கும் ஆயுதமேந்திய மிருக கூட்டம். மனித குலத்தின் அவமான சின்னம். இந்த வன்முறை கும்பலிடமிருந்து நாம் விலகி நடந்து கொண்டாலும் அதன் தாக்குதலிலிருந்து தப்பித்துவிட முடியாது என்பதையே இந்த குரூரம் நிரூபிக்கிறது.

● போஸ்



படிப்பகம்

www.padippakam.com

# போதைப் பொருட்கள் பெருக்கம்!

# அதிகாரிகள் பச்சைக்கொடி!

'போதைப் பொருள் கட்டுப்பாட்டு அதிகாரிகளால் கஞ்சாசெடி அழிக்கப்பட்டது' 'ஒரு கோடி மதிப்புள்ள ஹெராயின் பிடிபட்டது' 'வெளிநாட்டிலிருந்து போதைப் பொருள் கடத்திய கும்பல் கூண்டோடு பிடிபட்டது'... என பத்திரிக்கைகள் நாளும் செய்தி தருகின்றன. கடத்தல் கும்பலைப் பிடித்ததாக போலீசு அதிகாரிகளுக்கு வெகுமதி, பதக்கங்கள், பதவி உயர்வு அளிக்கப்படுகிறது.

ஆனால், போதைப் பொருட்களின் விற்பனையும் இதற்கு அடிமையாகி பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் இந்தியாவில் நாளும் அதிகரித்து வருகிறது. 1983-லிருந்து '88ம் ஆண்டுகளுக்குள்ளேயே 3 மடங்கு அதிகரித்திருந்தது. இன்று தலைநகர் டில்லியில் மட்டும் 'ஸ்மாக்' எனும் போதைப் பொருள் நாளொன்றுக்கு 50 லட்சம் ரூபாய்க்கு சாதாரணமாக விற்கப்படுகிறது. இங்கு போதைக்கு அடிமையாகியுள்ள 45000 பேரில் 60 சதவிகிதத்தினர் இளைஞர்கள் என்றும் இதில் 15 சதவிகிதத்தினர் பெண்கள் என்றும் ஒரு புள்ளி விவரம் கூறுகிறது.

இந்நிலையில் போதை மருந்து கடத்தல் கும்பலை பிடித்து விட்டதாக அரசும், போலீசும், பத்திரிக்கைகளும் செய்தி தருகின்றனவே. இது எந்த அளவிற்கு உண்மை?

போதை மருந்தை ஒழிப்பதற்கென 'லா அண்டு ஆர்டர்' மற்றும் குற்றப்பிரிவு போலீசு போதாது என தனியொரு புலனாய்வுப் பிரிவு, விஜிலன்சு படை, என்.சி.பி., டி.ஆர்.ஐ. முதலான துறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள அதிகாரிகள், அப்பாவிகளைப் பிடித்து போதை மருந்து கடத்தியதாக பதிவு செய்யப்படும் வழக்குகளே அதிகம். கடத்தல் பேர் வழிகள் என்று கைது செய்யப்படுபவர்களில் 60 சதவிகிதம் பேர் அப்பாவிகளே! டில்லியிலுள்ள திஹார் சிறையில் போதை மருந்து தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனை அனுபவித்து வரும் 400 பேரில் 266 பேர் நிரபராதிகள்.

நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக பல சட்டங்கள் உள்ளன. NDPS ACT - போதை மருந்து தடுப்புச் சட்டத்தின் 50-வது பிரிவு, 'போதைப் பொருள் வைத்திருப்பதாகவோ கடத்துவதாகவோ சந்தேகத்துக்குரிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொழுது அரசு உயர் அதிகாரிகள் [ACP, DCP] அல்லது நீதிபதிகளில் ஒருவர் உடன் இருக்க வேண்டும்' என்று கூறுகிறது. 'பொதுமக்கள் சார்பாக சமூக நலனில் அக்கறையுள்ள ஒருவர், குற்றவாளி என சாட்சி கொடுக்கும்பொழுதே வழக்குப் பதிவு செய்ய முடியும்' என்கிறது அதே சட்டத்திலுள்ள 100-வது பிரிவு. ஆனால் இச்சட்டங்கள் அதிகாரிகளை சிறிதளவும் பாதிக்கவில்லை.

ரிக்ஷாக்காரர்கள், கூலித் தொழிலாளர்கள், கிராமத்திலிருந்து பிழைப்புத் தேடி வரும் விவசாயிகள்... என அப்பாவிகளைப் பிடித்து பொய்வழக்கு ஜோடிக்கும் அதிகாரிகள், பொதுமக்கள் சார்பான சாட்சிக்காக சிலரை தயார் செய்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு போலீசு அதிகாரிக்கும் இப்படி 'இருப்பு சாட்சிகள்' உள்ளன. ஏன் சில போலீசு அதிகாரிகளே ஓய்வு பெற்ற பின் இந்த 'இருப்பு சாட்சி'ப் பட்டியலில் இடம் பெற்று விடுகிறார்கள். மௌலானா கால்வே, ராம்சிங், தர்சன்சிங், நரேந்திர குமார் முதலியோர் முறையே டில்லியைச் சேர்ந்த துணைக் கண்காணிப்பாளர்களான சுரீந்தர்சிங், வினய் குமார், வீரேந்திர சிங், ராஜேந்திர சிங் ஆகியோரின் 'இருப்பு சாட்சிகள்'. 1969ல் பணிபுரிந்த சங்கட் அலி எனும் போலீசு அதிகாரி இதுவரை 62 முறை பொய்சாட்சி வழங்கியுள்ளார்.

அனைத்து மட்டத்திலுள்ள போலீசு அதிகாரிகளுக்கும் போதை மருந்து கடத்தும் கிரிமினல் மற்றும் மாஃபியா கும்பலுக்கும் இருக்கும் கள்ளத்தொடர்பு ஊரறிந்த ரகசியம். மாஃபியா கும்பலையோ அதன் தலைவர்களையோ எந்த போலீசு அதிகாரிகளும் இதுவரை கைது செய்ததில்லை. அவர்களுக்குப் பதிலாக அவர்களது போலிகளை - கையாட்களை கைது செய்து கிரிமினல் கும்பலையே கைது செய்து விட்டதாக செய்தி தருகிறார்கள். கைது செய்தவர்களையும் சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி தப்பித்துக் கொள்வதற்கு வேண்டிய உதவிகளை செய்கிறார்கள். இதற்காக பல உத்திகள் கையாளப்படுகின்றன.

- கடத்தல் கும்பலின் போலிகள் மீது பதிவு செய்யப்படும் வழக்கில், முதல் தகவல் அறிக்கை (FIR)பொய்களும் புனைச் சுருட்டுமாக சினிமா கதை பாணியில் தயார் செய்கிறார்கள். "போலீசு அதிகாரிகள் பதிவு செய்யும் முதல் தகவல் அறிக்கை, கட்டுக்கதைகளாக இருப்பதால் கடத்தல் பேர்வழிகளுக்கு எளிதாக பிணை வாங்கித் தர முடிகிறது" என்கிறார் டில்லி உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அருண்குமார் சிறீவஸ்தவா.
- பொதுமக்கள் சார்பான சாட்சிகளே இல்லாமல் வழக்கை பதிவு செய்கிறார்கள். இதை காரணமாக வைத்து குற்றவாளிகள் நிரபராதிகளாகி விடுகிறார்கள். கடத்தல் பேர்வழி சிறீசிவபிரசாத் என்பவன் வழக்கில் பொதுமக்கள் சார்பான சாட்சி இல்லையென்ற காரணத்தால் டில்லி உயர் நீதி மன்றம் அவனை நிரபராதி என தீர்ப்பளித்தது.
- கடத்தல் கும்பலை பிடிக்க 'ரைடு'க்குச் செல்லும் போது நீதிபதிகளோ, உயர் அதிகாரிகளோ எவரும் உடன் இருப்பதில்லை. இதே டில்லி உயர் நீதிமன்றத்தில் நடந்த கிரிமினல் ராஜூபிரசாத் என்பவன் வழக்கில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி (ACP) 'ரைடு'க்குச் செல்லவில்லை என்பது தெரிய வந்தது. இக்காரணத்தினாலேயே இவ்வழக்கு தள்ளி வைக்கப்பட்டு விட்டது.
- கைப்பற்றப்பட்ட போதைப் பொருளை சோதித்து உயரதிகாரிகள் 'சீல்' வைப்பதில்லை. இதனால் கைப்பற்றப்பட்ட பொருளை போலியானதாக மாற்றி கேடிகள் தப்பித்துக் கொள்வதும் உண்டு.



படிப்பகம்

www.padippakam.com

நிரபராதிகளை வழக்கில் சிக்க வைக்கும், குற்றவாளிகளை சட்ட ஓட்டைகளைப் பயன்படுத்தி தப்பிக்க வைக்கும் போலீசு அதிகாரிகள் எவரும் இதுவரை தண்டிக்கப் பட்டதில்லை. மாறாக அதிகார வர்க்க கும்பலுக்கு அரசு பல சலுகைகளை செய்து கொடுக்கிறது.

1985-ல் 'கடத்தல் கும்பலைப் பிடிக்கும் நிர்வாகத்தினருக்கும் கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் மதிப்பில் 20% தொகை வெகுமதியாக அரசு வழங்கும்' என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. இத்தொகையையும் சுருட்டுவதற்காக, கடத்தல் கும்பலை பிடிப்பதற்கு உதவியாக என்று கூறி தனிப்பட்ட முறையில் ரகசியமாக ஆள் காட்டிகளை அதிகாரிகள் நியமித்துக் கொண்டனர். அரசும் இதை அங்கீகரித்தது. ஆள்காட்டிகள் கடத்தல் கும்பலைப் பிடிப்பதற்காகப் பயன்படவில்லை. அக்கும்பலுடன் அதிகாரிகள் கூட்டுவைத்து கொள்ளையடிப்பதற்கும் - பேரம் பேசுவதற்கும் இடைத்தரகர்களாக பயன்படுத்தப் பட்டனர். கடத்தல் கும்பலிடமிருந்து போதைப் பொருளைப் பெற்று அரசுக்கு கணக்கு காட்டி வெகுமதி தொகையைப் பெற்றுக் கொண்டபின் அக்கும்பலிடமே திருப்பி தந்து விடுவதற்கும் இது பாதையமைத்துக் கொடுத்தது.

இன்னும் சில அதிகாரிகளோ ஆள் காட்டிகள் மூலம் போதை மருந்து கடத்தலிலும் - விற்பனையிலும் ஈடுபடுகின்றனர். அண்மையில் டில்லியிலுள்ள காந்திநகரில் திலக்ராஜ் என்பவன் அரை கிலோ எடையுள்ள (50 லட்சம் ரூபாய் மதிப்புள்ள) போதைப் பொருள் கடத்தும் பொழுது டில்லி 'க்ரைம்' போலீசாரால் கைது செய்யப்பட்டான். இவன் போதை மருந்து கட்டுப்பாட்டு கமிட்டி (NCB) அதிகாரி ஒருவரின் ஆள்காட்டி. இவ்விஷயம் அம்பலமான உடனேயே இவ்வழக்கு உயர் அதிகாரிகளின் தலையீட்டில் முடக்கப்பட்டது.

போதைப் பொருள், கள்ளச் சாராயம், விபச்சாரம், முதலான சமூக நோய்களின் மூலக் கிருமியே ஆளும் வர்க்க கும்பல் தான்! இதை மறைப்பதற்காகவும், அதிகார வர்க்கம் மேலும் ஊதிக் கொழுப்பதற்காகவுமே ஆட்சியாளர்கள் பல போலீசு படைப் பிரிவுகளையும் பல சட்டங்களையும் உருவாக்குகிறார்கள். அதிகார வர்க்கமும் தம் பங்கிற்கு ஒருபுறம் மஃபியாக்களுடன் கூடிக் குழாவிக் கொண்டே மறுபுறம் போதை மருந்தை ஒழித்து விடுவதாகவும் - கிரிமினல் கும்பலை கூண்டோடு பிடித்து விட்டதாகவும் பம்மாத்து காட்டுகிறார்கள்.

கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டுமானால் அரசே மலிவு விலை சாராயம் வழங்குவதைத் தவிர வேறுவழியில்லை என காதில் பூ சுத்தி கடைகளை திறந்திருக்கிறார் கருணாநிதி. இதைப் போல போதை மருந்தையும் விபச்சாரத்தையும் ஒழிப்பதற்கென அரசே மலிவு விலையில் போதைப் பொருள் வழங்கினாலும் விபச்சார விடுதிகள் அமைத்துக் கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

● ராசு.



# போலிச் சுதந்திரத்தை அம்பலப்படுத்தி...

காஷ்மீர், பஞ்சாப் பிரச்னையை காரணம் காட்டி - பாகிஸ்தானுடனான யுத்தத்தை நியாயப்படுத்தி ஆட்சியாளர்களும், இந்து மதவெறியர்களும் யுத்த வெறியை திணித்துக் கொண்டிருக்கிறார்கள். ராம ஜன்ம பூமி, கிருஷ்ண ஜென்ம பூமி பிரச்னை மூலமும் இந்து மத வெறியூட்டி சிறுபான்மை முஸ்லீம்களை படுகொலை செய்து வெறியாட்டம் போடுகிறார்கள். இந்நிலையில் இவர்களோடு அனைத்து ஓட்டுப் பொறுக்கி கட்சிகளும் சேர்ந்து கொண்டு இந்தியாவின் 43வது 'சுதந்திர' தின விழாவை கொண்டாடி அகம் மகிழ்ந்தன. ஆனால் 43-வது முறையாக நெற்றியில் 'நாமத்தை' போட முயன்றவர்களை அம்பலப்படுத்தியும், பகுதியிலுள்ள பிரச்னைகளையே எடுத்துக் காட்டி போலி சுதந்திரத்தை திரை கிழித்தும், யுத்தவெறி மற்றும் மத வெறியை முறியடிக்க மக்களை அணி திரளும்படி அறைகூவியும் புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனைப் பிரச்சாரங்கள் நடத்தின.

**மதுரை:** ஆகஸ்ட் 15 அன்று செல்லூர் 60 அடி ரோட்டில் தோழர் முருகேஷ் தலைமையில் **மக்கள் கலை இலக்கிய கழகத்தின்** பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. எழுச்சி மிகுந்த முழக்கங்களுடன் தொடங்கிய பொதுக்கூட்டம், தோழர்கள் வேம்பன், கதிரவன் உரை நிகழ்த்த இடையிடையே புரட்சிகர பாடல்களுடன் சிறப்பாக நடந்தது. தோழர்கள், செல்லூர் பகுதி கைத்தறி நெசவு தொழிளாளர்களின் அவல நிலையை ரத்தினச் சுருக்கமாக எடுத்துக் காட்டி போலி சுதந்திரத்தை திரை கிழித்து பேசினர். நெசவாளர்களின் அவல நிலையை எடுத்தியம்பும் பாடலொன்றை பகுதி நெசவாளர்கள் விரும்பிக் கேட்கவே தோழர்கள் மீண்டும் பாடினர்.

**திருச்சி:** ஆகஸ்டு 15 அன்று வரகனேரி, தாராநல்லூர், ஆகிய பகுதிகளில் பகத்சிங் இளைஞர் முன்னணி பொதுக் கூட்டம் நடத்தியது. போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தியும், சுதந்திர போராட்ட வரலாற்றில் காந்தியின் துரோகத்தையும் பகத்சிங்கின் தியாகத்தையும் எடுத்துக் கூறி இயக்கத் தோழர்கள் பேசினர். பகுதி மக்கள் ஆதரவும், நிதியும் தந்தனர்.

**நல்லம்பள்ளி:** ஆகஸ்டு 15 புதிய ஜனநாயக வாசகர் வட்டம் சார்பில் பொதுக் கூட்டம் நடத்த முறையாக அனுமதி கோரி பெறப்பட்டது. ஆனால், கடைசி நேரத்தில் உள்ளூர் போலீசு அனுமதி இல்லையென மறுத்து அடாவடித்தனம் செய்தது. இதற்கு 32-வது தடையுத்தரவு சட்டம் பிறப்பிக்கப் பட்டுள்ளதாக காரணம் கூறியது. இதையொட்டியே போலி சுதந்திரத்தை அம்பலப் படுத்தியும், போலீசின் உரிமை மறுப்புச் செயலை கண்டித்தும் பகுதியில் தெருமுனைப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. போலி சுதந்திரமும் போலீசும் மக்கள் மத்தியில் அம்பலப்பட்டு போயின

**அரியலூர்:** ஆகஸ்டு 20 அன்று புதிய ஜனநாயக வாசகர் வட்டத்தின் சார்பில் போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் தோழர் காளியப்பன் சிறப்புரை ஆற்றினார். தோழர் முகிலன் மற்றும் வி.வி.மு. தோழர்கள் சிவஜோதி, ஜெயசீலன் ஆகியோரும் உரை நிகழ்த்த திருவையாறு வி.வி.மு. தோழர்களின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் சிறப்பாக நடந்தது. 300க்கும் மேற்பட்டவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டது குறிப்படத்தக்கது.

**சாத்தூர்:** புதிய கலாச்சார வாசகர் வட்டம் சார்பில் அகஸ்டு 15 அன்று சுவரொட்டி இயக்கம் எடுக்கப்பட்டது. நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. சுவரொட்டி ஒட்டிய பொழுதே நின்று படித்தவர்கள் பாராட்டி உற்சாகமளித்தனர். பகுதி மக்களிடையே இச் சுவரொட்டி இயக்கம் சிறந்த வரவேற்பை பெற்றதால் 'கியூ' பிரிவு போலீசு மோப்பம் பிடித்தது. பகுதியிலுள்ள போலிக் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த DYFI இளைஞர்கள் சிலர் போலீசிற்கு ஆள் காட்டி வேலை செய்தனர். 'கியூ' பிரிவு போலீசும் எளிதாக தோழர்களின் வீட்டாரை அணுகி விசாரித்துவிட்டு சென்றிருக்கிறார்கள். போலிக் கம்யூனிஸ்டுகளின் கீழ்த்தரமான வேலையை தோழர்கள் திரை கிழித்துப் பிரச்சாரம் செய்தனர். சி.பி.எம். கட்சியிலுள்ள சிலர், 'சிறிய சக்தியாக இருந்தாலும் உறுதியுடன் சரியாக செயல்படுகிறீர்கள்' என பாராட்டும்படி தோழர்களின் பிரச்சாரம் அமைந்திருந்தது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ்.மதியழகன், 21 பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஓலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



இந்திய அயலுறவு அமைச்சர் குஜ்ராலுடன் வரும் இவர்கள் குவைத் நாட்டிலிருந்தவர்கள்; அதிகாரிகள், மேட்டுக்குடியினரின் செல்லப் பிள்ளைகள்! குவைத் நாட்டை ஈராக் ஆக்கிரமித்துக் கொண்டதை காரணம் காட்டி. அமெரிக்கா அங்கு பெரும் நாசகார யுத்தத்தை மூட்ட தயாராகிறது. பிழைப்புக்காக குவைத்தில் குடியேறியவர்கள் எல்லாம் மரண பீதியில் சொந்த நாடுகளுக்கு ஓடுகிறார்கள். அங்கு 2 லட்சம் இந்திய மக்கள் வசிக்கிறாகள். அவர்களின் பாதுகாப்பைப் பற்றி ஆராய இந்திய அயலுறவு அமைச்சர் குஜ்ரால் அங்கு சென்றார்.

சென்றவர். அங்கு இருந்த சாதாரண இந்தியர்களைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படவில்லை. இந்திய அதிகாரிகளின் குடும்பங்களையும் தொழிலதிபர்களின் சீமந்த புத்திரர்களையும் நலம் விசாரித்தார். அதிலும் குறிப்பாக தான் பிறந்து ஓட்டு பொறுக்கும் மாநிலமான பஞ்சாப் மேட்டுக் குடியினர் மற்றும் தனவந்தர்களின் பாதுகாப்புப் பற்றிதான் அதிக அக்கறை செலுத்தினார். தன் தனி விமானத்தில் இலவசமாக 200 பேரை இந்தியாவுக்கு கூட்டிச் செல்கிறேன் என்றார். நாடு திரும்பும் ஆசையில் கர்ப்பிணி பெண்களும், நோயாளிகள் சிலரும் குஜ்ராலுடன் வர விருப்பம் தெரிவித்தனர். கடைசியில் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த செல்வ சீமான்கள், அவர்களது குடும்பத்தினரைத்தான் அழைத்து வந்தார். அமைச்சரின் இந்த அநாகரிகத்தை கண்டு அதிகாரிகள் கூட முகஞ்சுளித்தனர். ஒருவர் மந்திரியின் எதிரிலேயே தன் 'பாஸ் போர்ட்டை' கிழித்தெறிந்து இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

இதோ. இந்திய அரசு உதவி என்ற பெயரில் குவைத்திலிருந்து சில ஆயிரம் பேர்களை ஓட்டி வந்துள்ளதை பாருங்கள்! பம்பாயில் இறக்கப்பட்ட இவர்கள் பள்ளி ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சொந்த ஊருக்கு செல்லவும் பயணச் செலவுக்கு பணம் இல்லாமல் இருக்கிறார்கள். இப்போது இந்திய வங்கிகள் உட்பட எந்த வங்கிகளும் குவைத் நாணயத்தை ஏற்றுக் கொள்வதில்லை. இதனால் இவர்கள் வைத்திருந்த சில பணம் காகிதமாகி விட்டது! குவைத்திலிருந்து கால் நடையாகவே ஜோர்டானுக்கு வந்து அங்கு தங்கியிருந்து அதிகாரிகளின் கையை காலை பிடித்து இந்தியாவுக்கு வந்தார்கள்.



குவைத்தில் நிலைமை ''திகில்'' நிறைந்ததாகவோ ''பதட்டம்''. ''பீதி'' நிலவுவதாகவோ இல்லை. ஆனாலும் இந்திய மக்கள் அங்கு ''கவலை''படுகிறார்கள் என்று நாடு திரும்பிய குஜ்ரால் நக்கல் செய்தார். ''அங்கிருக்கும் ஒன்றரை லட்சம் இந்திய மக்களை அழைத்து வந்து விட்டால், மீண்டும் அவாகளுக்கு அங்கு வேலை கிடைக்கும் என்ற உத்திரவாதம் இருக்காது'' என்று பண ஆசையை தூண்டுகிறார்கள். தன் கும்பலை பேணி காத்துக் கொண்டு உழைக்கும் மக்களை உதாசீனப்படுத்தும் அதிகார கும்பலை நாம் கப்பலேற்றி துரத்தியடிப்பது எப்போது?

படிப்பகம்